Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 27 திங்கட்கிழமை (11.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :227

# திருகோணமலையில் பட்டப்பகலில் புலிகளின் அலுவலகம் மீது தாக்குதல்!

## இரு போராளிகள் உட்பட நால்வர் பலி! வானில் வந்த நபர்கள் கைவரிசை!!

திருகோணமலை,ஜூலை11

திருகோணமலையில் நேற்றுப் பட்டப்பகலில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் ஒன்று இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளது. கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கொண்டு வந்த அடையாளம் தெரியாத சில நபர்கள் நடத்திய இந்தக் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கிரனேட் தாக்குதலில் இரு போராளிகள் உட்பட நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்த புலிகளின் அலுவலகம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இராணுவத்தினரே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று புலிகள் குற்றஞ்சாட்டினர். படைத்தரப்பு அதனை மறுத்தது.

சம்பவத்தையடுத்து திருகோணமலை நகரத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



படையினரை அகற்றுமாறு கோரும் பொதுமக்கள்.



கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்தில்...

திருகோணமலை மூன்றாம் கட்டைச் சந்தியில் இருந்து செல்வநாயகபுரம் நோக்கிச் செல்லும் வீதியில் செல்வநாயகபுரத்தில் இருக்கும் அரச பண்ணை வீட்டில் அமைந்திருந்த புலிகளின் அலுவலகமே தாக்கப்பட்டது.

வேகமாக வந்துநின்ற வெளிர் சாம்பல்நிற வான் ஒன்றிலிருந்து குதித்த 10 முதல் 15 பேர் வரையானோர் ஆயுதங்களுடன் புலிகள் தங்கியிருந்த வீட்டை நோக்கிப் பாய்ந்தனர் என்றும்-

அப்போது அவர்கள் 'சுடடா சுடடா' என்று தமிழில் கத்தினர் என்றும் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தனர். ஆயுததாரிகள் அனைவரும் கறுப்பு உடைகளை அணிந்திருந்தனர் என்றும், தமது முகங்களைக் கறுப்புத்துணியால் மூடிக் கட்டியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அலுவலகத்திற்குள் நுழைந்து அவர்கள் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். கிரனேட் தாக்குதலையும் நடத்தினர். இதில் அங்கிருந்த போராளிகள் இருவர் உட்பட ஐவரும் இரத்த வெள்ளத்தில் சரிந்தனர். அவர்களில் நால்வர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். அதன் பின்னர் தாக்குதல் நடத்தியவர்கள் மீண்டும் வானில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தத் தாக்குதலில் புலிகளின் கிழக்குக் கடற்புலித் தளபதிகளில் ஒருவரான டிக்கான், போராளி இயம்புலி ஆகியோரும் பொதுமக்களான விஜேந்திரராசா என்ற தேசியத் துணைப்படை வீரரும் கோணேஸ்வரன் முத்தையா ஆகிய இருவரும் உயிரிழந்தனர். செல்வகுமார் (வயது-32) என்ற பொதுமகன் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களையும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட (14ஆம் பக்கம் பார்க்க)



தாக்குதல் நடந்த புலிகளின் பணிமனை.



கடற்புலித் தளபதி டிக்கன் சடலமாக...

## திருமலையில் இன்று துக்கதினம்; நாளை முழு அளவில் கடையடைப்பு!

கொழும்பு,ஜூலை11

திருகோணமலையில் நேற்றுப் படுகொலை செய்யப்பட்ட போராளிகளின் வித்துடல்கள் இன்று ஆலங்குளம் மாவீரர் மயானத்தில் விதைக்கப்படவுள்ளன. அதனையொட்டி இன்று பூரண துக்கதினம் அனுஷ்டிக்க திருமலை தமிழ்மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. நாளை பூரண கதவடைப்புக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வி.விக்னேஸ்வரன் நேற்று இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று திங்கட்கிழமை மாவட்டம் முழுவதும் பூரண துக்கதினம் அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கிறோம். நாளை பூரண கதவடைப்பில் ஈடுபடுமாறும் வேண்டுகின்றோம்.

திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் அரசியல் பணிக்காக வந்திருந்தவேளை (14ஆம் பக்கம் பார்க்க)

## திராய்கேணி கிராமத்தில் நேற்று விசேட அதிரடிப்படை தேடுதல்

கொழும்பு,ஜூலை11

அம்பாறை மாவட்டத்திலுள்ள திராய்கேணி என்ற கிராமத்தில் விசேட அதிரடிப்படையினர் நேற்றுப் பாரிய தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அக்கரைப்பற்று நகரிலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவிலுள்ளது திராய்கேணி. நேற்றுப் பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை இந்தக் கிராமத்தைச் சுற்றிவளைத்த 200இற்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் தேடுதல்களை மேற்கொண்டனர். ஒவ்வொரு வீடு வீடாகப் புகுந்து படையினர் சோதனைகளை மேற்கொண்டனர்.

கிராமத்தில் இருந்த சுமார் 150 இளைஞர்களும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் (14ஆம் பக்கம் பார்க்க)

## கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி. பாதயாத்திரை

கொழும்பு,ஜூலை11

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக இம்மாத இறுதியில் ஜே.வி.பி. மாபெரும் பாதயாத்திரையொன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு எதிரான மக்கள் விழிப்புணர்ச்சித் திட்டங்களைத் தற்போது அக்கட்சி நடத்திவருகிறது. இரு வாரங்கள் நடைபெறும் இத்திட்டத்தின்கீழ் பல கூட்டங்களையும் ஜே.வி.பி. நடத்துகிறது.

இந்த இருவார மக்கள் விழிப்புணர்ச்சித் திட்டத்தின் முடிவில் இந்த மாபெரும் பாதயாத்திரையை நடத்தவுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (க-ரி)

# முஸ்லிம் தலைமைகளுடன் நேரில்பேசி பிரச்சினைகளைத் தீர்க்க புலிகள் தயார்!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அறிவிப்பு



கிளிநொச்சி,ஜூலை11

பொதுக்கட்டமைப்பு விவகாரம் உட்பட பல விடயங்களில் நமது தமிழ் பேசும் சகோதரர் களாகிய முஸ்லிம் மக்களுக்கு ஏதேனும் ஆதங்கங்கள், பிரச்சினைகள் இருக்குமானால், அவை குறித்து முஸ்லிம்களின் தலைவர்களோடு நேரில் பேசித் தீர்த்துக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். அவர்கள் எம்மோடு வந்து கலந்துரையாடி புரிந்துணர்வின் அடிப்படையில் இவற்றை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவிக்கிறார். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

'உதயன்' அரசியல் செய்தியாளருக்கு நேற்றுமுன்தினம் இரவு வழங்கிய விசேட செவ்வியேலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடயங்களைப் பேசித் தீர்ப்பதற்குத் தேசிய ஐக்கிய முன்னணியின் ('நுஆ') தலைவி பேரியல் அஷ்ரப்பிடம் இருந்து சமிக்ஞை கிடைத்திருப்பதை அவர் இச்சந்திப்பில் உறுதிசெய்தார்.

தேவைப்பட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடன் கலந்துரையாடத் தாங்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதையும் அவர் தெரிவித்தார்.

எனினும், தமிழ் - முஸ்லிம் மக்கள் இடையிலான நல்லுறவில் நிரந்தரக் கீறல் விழுந்துவிடக்கூடிய வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் சிலரின் கருத்துகள் வெளியாவது புலிகளின் தலைமையை விசனம்கொள்ள வைத்திருப்பதையும் தமிழ்ச்செல்வனுடனான உரையாடலில் (14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கல்வித்தரம் பாதிக்கப்படாமலிருக்க

# இலவச பாடநூல்கள் உரியகாலத்தில் தமிழ் மாணவருக்கு கிடைக்கவேண்டும்

### வெளியீட்டுத் திணைக்கள அதிகாரியிடம் வலியுறுத்து

அச்சுவேலி,ஜூலை11

இலவசப் பாடப்புத்தக விநியோகத்தின் குறைபாடுகளினால் தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, உரிய காலப்பகுதியில் மாணவர்களுக்கான பாடநூல்கள் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக செயலர் எஸ். சரவணப வானந்தன் கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் கச்சி முகமவவிடம் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக எஸ்.சரவணபவானந்தன் தெரிவித்ததாவது, தரம் 7 மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் இரண்டாம் தவணை முடிவடைகின்ற காலப்பகுதிவரை யாழ். மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாண வர்களுக்கு வழங்கப்படவில்லை. இலவசப் பாடப் புத்தக விநியோகத்தில் நிலவும் குறை பாடுகளினால், தமிழ் மாணவர்களுக்கு ஏற் படும் பாதிப்புக்கள் குறித்துப் பிரதி ஆணை யாளரிடம் எடுத்துரைத்தோம். அவற்றை ஏற் றுக்கொண்ட அவர், எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாது என அவர் உறுதியளித் துள்ளார்.

தமிழ்மொழில் நூல்களில் காணப்படும் தவறுகள் மற்றும் குறைபாடுகள், புதிய புத்த கங்களை அறிமுகம் செய்யும்போது, தமிழ் மூல நூல்கள் வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதங்கள் ஆகியவை உட்பட பல விடயங் கள் தொடர்பாகக் கருத்துக்கள் இந்தச் சந்திப் பின்போது பரிமாறப்பட்டன என்று கூறினார்.

இதேவேளை, தனியார் அச்சகங்களில் அச்சிடப்படும் புத்தகங்கள் உரியகாலத்தில் விநி யோகிக்கப்படுவதாகவும் - அரச அச்சகக் கூட் டுத்தாபனத்தினால், அச்சிடப்படும் புத்தகங் களின் விநியோகத்திலேயே தாமதங்கள் நில வுவதாகவும் கூறப்படுகின்றது. (ஒ-11)

### விளையாட்டு விழா

வலி.தெற்கு,ஜூலை11

யாழ். ஞானக்குழந்தைகள் இல்லத்தின் 13ஆவது விளையாட்டு விழா நாளை செவ் வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

ஞானக்குழந்தைகள் இல்லப் பொறுப்பாசி ரியை வ.நீலரஞ்சினி தலைமையில் நடைபெற வுள்ள இவ் விளையாட்டு விழாவில் யாழ்ப் பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதி பதி பா.தனபாலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-152)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு உணவு உண்டபின் உடல்நிலை பாதிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை11

மதிய உணவைச் சாப்பிட்ட ஒரே குடும் பத்தைச் சேர்ந்த ஐவர் உடல்நிலை பாதிக்கப் பட்டனர். ஏழாலை கிழக்கில் நேற்றுமுன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் கார்த்திகேசு பாலசுந்தரம் (வயது45) அவரது பிள்ளைகளான பாலசுந்தரம் சஞ்சீவன் (வயது8), பாலசுந்தரம் சயந்தினி (வயது5), பால சுந்தரம் சஞ்சீகா (வயது4), பாலசுந்தரம் அனுஷன் (வயது2) ஆகிய ஐவரும் பாதிப் படைந்தவர்களாவர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் கத்தரிக்காய், பருப்பு போன்ற கறிவகைகளுடன் சோறு சாப்பிட்ட இவர்களுக்கு மாலையில் வயிற்று ளைவு ஏற்பட்டதாகவும் - இதனால், இரவுச் சாப்பாடு உண்ணாமல் இருந்த இவர்களுக்கு இரவு 11 மணியளவில் வாந்தியும், வயிற்றோட்டமும் ஏற்பட்டதாக வும் கூறப்படுகிறது.

இதனால், மயக்கநிலைக்குச் சென்றவர்களை தெல்லிப்பழை வைத்தியசாலையில் உற வினர் அனுமதித்தனர். இவர்களில் நான்கு பிள்ளைகளும் மேலதிக சிகிச்சையின் பொருட்டு நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த உணவை உண்ட பிள்ளைகளின் தாய் தெய்வாதீனமாக எந்த வித பாதிப்பிற்குமுள்ளாகவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

### ஐரோ. ஆணைக்குழுவின் உபதலைவர் இன்று வருகை



ஐரோப்பிய ஆணைக் குழுவின் உபதலை வர் மார்க்கொட்ரொஸ் ரோம் இன்று திங்கட் கிழமை இலங்கை வருகிறார். நான்கு நாள்கள் விஜயத் தினை மேற்கொண்டு வரு கைதருகின்ற இவர்தென்பகுதி யில் ஐரோப்பிய ஆணைக் குழு வால் மேற்கொள்ளப்படு கின்ற அபிவி ருத்தி திட்டங்கள் பற்றி ஆராயவுள்ளார். அத்து டன், ஜனாதிபதி, எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து இவர் பேச்சு நடத்தவுள்ளார்.(ஒ-13)

### முன்னாள் அதிபர்களின் உருவப்படத் திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை11

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியால யத்தின் முன்னாள் அதிபர்களின் உருவப்படத் திரைநீக்க விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்தாபக அதிபர் க.கணபதிப்பிள்ளை, ஆ.சுப்பிரமணியம், நா.சங்கரப்பிள்ளை, செல்வி இராசம்மா ஆகியோரின் உருவப்படங்களே இவ்வாறு திரைநீக்கம் செய்யப்படவுள்ளன.

திரைநீக்க விழாவில் யாழ். கொட்டடி நம சிவாய வித்தியாலய அதிபர் சு.நடராஜலிங் கம் முதன்மை விருந்தினராக கலந்துகொள் வார்.

நெடுந்தீவு மாவலித்துறை றோ.க. வித்தி யாலய முன்னாள் அதிபர் திருமதி பி.பி.ஜே. தோமஸ் இந்த விழாவில் கௌரவிக்கப்படு வார். (எ)

## உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணி நடந்த பாடசாலைகள் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் இடம்பெற்ற 28 அரச பாடசாலைகளும் இந்த ஆண்டு இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப்படவுள்ளன.

கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், மாத் தறை, வவுனியா, அநுராதபுரம், இரத்தினபுரி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளை, கல் முனை ஆகிய 12 மாவட்டங்களில் மூடப்பட் டுள்ள சகல பாடசாலைகளும் இன்று திறக்கப் படவுள்ளன. உயர்தரப் பரீட்சை இரண்டாம் கட்ட மதிப்பீட்டு வேலைகள் இம்மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை 23 நிலை யங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஒ-ரி)

## வலைபந்தாட்டம்

# யூனியன் கல்லூரியின் மூன்று அணிகளும் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றன

வவுனியா,ஜூலை11

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட, 17 வயதுக்குட்பட்ட மற்றும் 19 வயதுக்குட்பட்ட வலைபந்தாட்ட அணிகள் தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்கத் தகுதிபெற்றுள்ளன.

கடந்த 8 மற்றும் 9ஆம் திகதிகளில் வவுனியாவில் பாடசாலை அணிகளுக்கிடையேயான மாகாணமட்டப் போட்டி இடம்பெற்றது.

இதில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 15 வயதுக்குட்பட்டோர் பிரிவிலும், 19 வயதுக்குட்பட்டோர் பிரிவிலும் முதலிடத்தைப் பெற்றது. 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. இதனால், தேசியமட்டப் போட்டியில் பங்குபற்றும் தகுதியை இக்கல்லூரியின் மூன்று பிரிவு அணிகளும் பெறுகின்றன. (ஒ-86-164)



15 வயதுக்குட்பட்டோர் அணி



17 வயதுக்குட்பட்டோர் அணி



19 வயதுக்குட்பட்டோர் அணி

தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூ ரியின் வலைபந்தாட்ட அணி வீராங்கனைகள், அணிப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் அதிபருடன்.... (படங்கள்:- நேசன்)

## திருத்தி அமைக்கப்பட்ட பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

### கல்வி வலயங்களில் ஏற்பாடுகள்

அச்சுவேலி,ஜூலை11

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களுக் கான பதவி உள்ளீர்ப்பு, சம்பள உயர்வு வழங்கு வதற்கான ஏற்பாடுகள் வலயக்கல்வி அலுவல கங்களில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை அதிபர்கள் ஊடாக சமர்ப்பிப்பதற்கான படி வங்கள் வலயக்கல்வி அலுவலகங்களில் விநி யோகிக்கப்பட்டுவருகின்றன.

புதிய பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 1994 ஆம் ஆண்டுக்கும் 2004ஆம் ஆண்டுக் கும் இடைப்பட்ட காலப்பகுதி வரையுள்ள 10 வருடகாலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் தமது சேவைக் கணிப்பில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தமது விண் ணப்பங்களை இறுதியாகக் கடமைபுரிந்த பாட சாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## கிளிநொச்சியில் முகாமைத்துவ செயலமர்வு

கிளிநொச்சி,ஜூலை11

கிளிநொச்சி வலயத்தில் நூலக பெரு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ விழிப்புணர்வுச் செயலமர்வு நாளை செவ் வாய்க்கிழமை தொடக்கம் 3 தினங்கள் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள் தொடர்பாகவும், நூலக அபிவிருத்தியினூடாக கல்வி அபிவிருத்தியை முன்னெடுப்பது தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் மத்திய கல்வி அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலகமும் தகவல் விஞ்ஞானத்திற்குமான தேசிய நிறுவ கம், மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற் றின் வளவாளர்கள் கலந்துகொள்வர்.

இச் செயலமர்வில் பாடசாலை அதிபர் களைக் கலந்துகொண்டு பயனடையுமாறு மாகாண நூலக பெருவளர்ச்சி அலகின் மாகாண நூலக இணைப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான ந.அனந்தராஜ் கேட்டுள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான செயல மர்வு எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 3 தினங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-204)

## 100 மீற்றர் தடைவலயம் குறித்து மீளாய்வுசெய்யக் குழு அமைப்பு

கொழும்பு,ஜூலை11

கடற்கரையோரங்களில் 100 மீற்றர் வரை கட்டடங்கள் அமைக்கத் தடைவிதிப்பது தொடர்பாக ஆராய ஜனாதிபதி விசேட ஆய் வுக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

கரையோரப் பாதுகாப்புக்கு இடையூறு விளைவிக்காத வகையில், கரைக்குச் சமீப மாக 100 மீற்றருக்குள் உள்ள உயரமான பகு திகளில் கட்டுமானங்களை மேற்கொள்ள வகை செய்வது தொடர்பாக இக்குழு பரிசீலனை களை மேற்கொள்ளுமெனவும், அத்தியாவ சியத் தேவைகள் தொடர்பான ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் போது தெரிவித்துள்ளார்.

கடற்கரையோரங்களில் இருந்து இடம் பெயர்ந்து மக்கள் மீண்டும் அந்த இடங்களில் குடியிருக்க விருப்பம் தெரிவித்துள்ளனர் என்ற காரணத்தால், கொள்கைகளைத் தளர்த்து வதற்கு அவசியமேற்பட்டுள்ளது எனவும்-

அக்காரணத்தை முன்னிட்டே ஜனாதிபதி யினால் இத்தகைய குழுநியமனம் செய்யப் பட்டுள்ளது எனவும் -

வெகுவிரைவில் இது தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-206)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர்களுக்குச் சூட்டப்படும் 'பயங்கரவாத' முகமூடி!

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் மக்கள் பாதுகாப்பு, சட்டம் - ஒழுங்கு மற்றும் பௌத்த சாசன அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க 'புதிய கண்டுபிடிப்பு' ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

*'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயங்கரவாதிகளையே பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.'* - என்பதுதான் அந்தக் கண்டுபிடிப்பு.

'மக்கள் பிரதிநிதித்துவம்' - என்ற விடயம் குறித்து அமைச்சர் ரட்ணசிறி பேசுவது விந்தையானது. தற்போதைய நாடாளுமன்றத்துக்குப் பின்கதவால் வந்து, அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டு, அந்தப் பதவி தந்த அந்தஸ்துடன் இப்படிக் கண்டுபிடிப்புகளை வெளியிடுகின்றார் அவர்.

தேசியப் பட்டியல் மூலம் அவர் எம்.பியானதால் அவர் நாடாளுமன்றத்துக்குப் பின்கதவால் வந்தார் என நாம் கூறவில்லை. கடந்த தேர்தல் சமயத்தில் தேசியப் பட்டியலில் எம்.பியாக நியமிக்கப்படக்கூடியோரின் பட்டியலை ஏனைய கட்சிகள்போல அவரது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தாக்கல் செய்திருந்தது. அக்கூட்டமைப்பு சார்பில் மாவட்ட ரீதியில் போட்டியிட்ட வேட்பாளர் பட்டியலிலோ அல்லது தேசியப் பட்டியல் ரீதியில் எம்.பியாக நியமிக்கப்படும் வேட்பாளர் பட்டியலிலோ அவரது பெயர் குறிப்பிடப்படவேயில்லை. அதாவது, கடந்த பொதுத் தேர்தலில் மக்களின் முன்வேட்பாளராகவே வராதவர் அவர். அப்படியிருக்க, ஜனாதிபதிக்கு மிக நெருக்கமானவர் என்ற ஒரு தகுதிக்காக பின்கதவால் பின்னர் எம்.பியாக அழைத்துவரப்பட்டவர். மக்கள் பிரதிநிதித்துவம் குறித்து அவர் பேசுவது விந்தையிலும் விந்தை.

சரி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் பயங்கரவாதிகளையே பிரதிநிதித்துவம் செய்கின்றனர் என்று சொல்வதன் மூலம் அவர் எதைக் கூறவருகின்றார்?

தமிழர் தாயகத்தில் தொண்ணூறு வீதமான மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் தமிழ்க் கூட்டமைப்பினர். 1977 இல் தனித் தமிழீழத்துக்கு ஆணை கொடுத்ததுபோல கடந்த பொதுத் தேர்தலிலும் தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு ஆணை கொடுத்தார்கள் - புலிகளைத் தமது ஏக, அதிகாரபூர்வப் பிரதிநிதிகளாக அறிவித்து, புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுகளை தாமதமின்றி ஆரம்பிக்கும்படி.

ஐந்து தசாப்த காலத்துக்கு முன்னர் ஈழத் தமிழர்கள் தங்களது இருப்புக்காகவும், அடிப்படை உரிமைகளுக்காகவும், கௌரவத்துடன் கூடிய வாழ்வுக்காகவும் அமைதி முறையில் - சாத்வீக நெறியில் - அஹிம்சை வழியில் - ஆரம்பித்த போராட்டம் காலம் காலமாகத் தொடர்ந்து வந்த பௌத்த, சிங்கள மேலாண்மை வாதப் போக்கு அரசுகளினால் ஆயுத முனையில் அடக்கப்பட்டது. அதன் விளைவாக வேறுவழியின்றி தமது உரிமைப் போரை ஆயுத வழிக்குத் திருப்ப வேண்டியவர்களானார்கள் தமிழர்கள். அப்படி மெல்ல, மெல்ல ஆயுதவழிக்குத் தமிழர் போராட்டம் திரும்பியபோது அதில் ஈடுபட்ட போராளிகளை 'பயங்கரவாதிகள்' என்று நாமம் சூட்டி கொடூரவாதிகளாகச் சித்திரிக்க முயன்றது பேரினவாதம்.

ஆனால், காலப்போக்கில் முழுத் தமிழர்களுமே வேறு வழியின்றி - தமக்கு நீதி, நியாயம் கிடைப்பதற்காக - அந்தப் போராளிகளின் பின்னர் அணிதிரண்டு நிற்கும் நிலைமை இப்போது உருவாகியிருக்கிறது.

'தமிழ் மக்களே புலிகள்; புலிகளே தமிழ் மக்கள்' என்றும் கூறும் நிலைமை கடந்த பொதுத்தேர்தலில் வெளிப்படுத்தப்படும் சூழல் உருவானதற்கு பௌத்த, சிங்களப் பேரினவாதமே முக்கிய காரணம்.

பேரினவாதிகளின் அகராதியில் சுதந்திரத்துக்காக - உரிமைக்காக - குரல் எழுப்பும் ஒவ்வொரு தமிழனும் 'புலி'; ஒவ்வொரு தமிழனும் 'பயங்கரவாதி' அந்த வகையில் பார்த்தால் ஈழத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 22 பேரும் 'பயங்கரவாதிகளை' பிரதிநிதித்துவம் செய்பவர்கள் தாம்.

பௌத்தத்தின் பெயரால், சிங்களம் மேற்கொள்ளும் அடக்குமுறைக்கு எதிராகவே போராடப் புறப்பட்டவர்களைத்தான் இப்போதும் அமைச்சர் ரட்ணசிறி போன்றோர் 'பயங்கரவாதிகள்' என்கின்றனர். பௌத்தசாசன அமைச்சையும், தமிழருக்கு எதிரான அடக்கு முறைகளுக்குப் பயன்படுத்தப்படும் படைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டம் - ஒழுங்கு அமைச்சையும் வைத்திருக்கும் ஒருவர் இப்படிக் கூறுவதில் வியப்பில்லை.

அதுமட்டுமல்ல, 1994 இல் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி சந்திரிகா அரசில், சந்திரிகாவைத் தொடர்ந்து பிரதமராக இருந்த அவரது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவி விலக, அந்த இடத்துக்கு பிரதமர் பதவிக்கு வந்தவர் இதே ரட்ணசிறி விக்கிரமநாயக்கதான்.

அந்தப் பதவியில் ஒட்டிக்கொண்டு பேரினவாத சிங்களவர் மத்தியில் 'அப்ளாஸ்' வாங்குவதற்காக அவர் கிளப்பிய இனவாதம் நாடறிந்தது. 2000 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் அரசு பின்னடைவுகளைச் சந்திக்கவும், 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் தேர்தலில் சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தோல்வியுறவும் காரணமாக அமைந்தவற்றில் ரட்ணசிறி கிளப்பிய இனவாதமும் ஓர் அம்சமாகும்.

ஈழத் தமிழர்களின் நியாயமான குரலுக்கு செவிமடுக்காமல் அதைப் புறம்தள்ளி வந்ததன் பயனைத்தான் - விளைவைத்தான் - பெறுபேறைத்தான் - இன்று இலங்கைத் தீவு இப்படி அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

ஈழத் தமிழரின் நியாயமான கோரிக்கைகளை - அபிலாஷைகளை - கவனத்தில் எடுக்காமல் புறந்தள்ளுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையே தமிழர்களின் ஜனநாயகக் குரலுக்கு பயங்கரவாத முகமூடி சூட்டும் இந்த வேலையாகும்.

# சின்னமடுவில் 20 பேருக்கு காணி உறுதிகள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,ஜூலை11

ஊர்காவற்றுறை சின்னமடுப் பகுதியைச் சேர்ந்த 20 பேருக்கு அண்மையில் காணி உறுதிகள் கையளிக்கப்பட்டன.

'ஜயபூமி' திட்டத்தின் கீழ் இந்தக் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.


மேற்படி காணி உறுதிகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு காணி உறுதி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

காணி உறுதிகள் கையளிக்கும் நிகழ்வில் உரை நிகழ்த்திய யாழ்.அரச அதிபர்:-

வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது காணி உறுதி மிகவும் முக்கியமான ஆவணமாகக் கொள்ளப்படுகின்றது. இதுவரை காலமும் அரசினால் வழங்கப்பட்ட காணிகளில் குடியிருந்தவர்கள் இந்த உறுதிகளைப் பெற்றுக்கொண்டவுடன், காணி உரிமையாளர்களாக மாறிவிடுகின்றனர்.

எனவே, இத்தகைய பெறுமதிமிக்க காணி உறுதிகளைப் பேணிப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னின்று செயற்பட்ட உதவி அரச அதிபரும், உத்தியோகத்தர்களும் நன்றிக்குரித்தானவர்கள் - என்றார். (எ)



காணி உறுதி கையளிப்பு நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் உரை நிகழ்த்துவதையும், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் குடும்பத் தலைவர் ஒருவரிடம் காணி உறுதியைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (எ)

# ஆசிரியவாண்மையை உயர்த்த கற்பித்தல் சாதனைப் போட்டி

## கல்வியியற் கல்லூரி நடத்தும்

வலி.தெற்கு,ஜூலை11

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடையே ஆசிரியவாண்மையை உயர்த்தும் நோக்குடன் கற்பித்தல் சாதனங்களை உருவாக்கும் போட்டியை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நடத்தவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றும் அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் இப்போட்டியில் பங்குகொள்ள முடியும் என்றும்-

இப் போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப் பெறும் ஆசிரியர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வலயமட்டத்தில் நடத்தப்படும் போட்டியில் முதலிடத்தைப் பெறும் ஆசிரியருக்குச் சிறப்புக்கேடயமும் சான்றிதழும் வழங்கப்படும். ஏனைய தகுதியானவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டியானது முதன்மைநிலை ஒன்று முதன்மைநிலை இரண்டு, முதன்மை நிலை மூன்று ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் தமது சொந்த முயற்சியில் உருவாக்கிய கற்பித்தல் சாதனங்களைப் பாடசாலை அதிபரின் உறுதியுரையுடன் எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

அத்துடன், போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 21ஆம் திகதி அன்று போட்டியாளர்கள் தமது கற்பித்தல் சாதனங்கள் தொடர்பான விளக்கங்களை வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-152-203)

# யாழ்.நவீன சந்தைப்பகுதியில் திட்டமிட்டு சைக்கிள்கள் திருட்டு

## ஒருவாரத்தில் மட்டும் 3 சம்பவங்கள்

வலி.தென்மேற்கு,ஜூலை11

யாழ்.நவீனசந்தைப் பகுதியில் நிறுத்தப்படும் சைக்கிள்கள் திருடர் கோஷ்டி ஒன்றினால் திட்டமிட்டு திருடப்பட்டுவருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ்.பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் தமது சைக்கிளை நவீன சந்தையின் கிழக்குப் பக்கத்தில் நிறுத்தி பூட்டிவிட்டு புடைவைக் கடை ஒன்றுக்குச் சென்றுள்ளார். பின்னர் உடுபுடைவைகளைக் கொள்வனவு செய்துகொண்டு வந்து பார்த்தபோது தமது சைக்கிள் திருடப்பட்டது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

பூட்டிய நிலையில் விடப்பட்டிருந்த சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பெண்கள் பயன்படுத்தும் லுமாலா சைக்கிளே இவ்வாறு திருட்டுப்போயுள்ளது.

இப் பகுதியில் இயங்கும் திருடர் கோஷ்டியொன்று திட்டமிட்டு பூட்டிய சைக்கிள்களின் பூட்டை உடைத்து திருடிவருவதாக இப்பகுதியிலுள்ள வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் மட்டும் மூன்று சைக்கிள்கள் இவ்விடத்தில் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# சுகாதாரசேவைப் பணிமனையில் ஆரம்ப கண் பராமரிப்பு பயிற்சி

குருநகர்,ஜூலை11

ஆரம்ப கண் பராமரிப்புப் பயிற்சி வகுப்புகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் ஆரம்ப சுகாதார சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மருத்துவமாதுக்கள், வைத்திய அதிகாரிகள், தாதிசேவையைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்புகள் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும். கண்டியிலுள்ள இலங்கை கண் நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் கலாதேவி சிவயோகவிதன் இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

இலங்கையின் பல பாகங்களிலும் 1997ஆம் ஆண்டிலிருந்து இப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்ற போதிலும் வடமாகாணத்தில் தற்போதுதான் முதல்முறையாக இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது என இலங்கை கண் நிறுவனத் தலைவர் டாக்டர் சீ.ஆர்.சீமன் தெரிவித்தார். (எ-51)

## உதயவாக்கு

எந்தக் காரியமுமே நனவாகும் வரை கனவாகத்தான் உள்ளது.

*- ஓர் அறிஞன்*

## நாளை

*ஆனி 28*
*செவ்வாய்க்கிழமை*
*12.07.2005*
*திதி: ஷஷ்டி*
*பின்னிரவு 3.51 வரை*
*நட்சத்திரம்:*
*உத்தரம் முழுவதும்*
*சுபநேரம்: 10.29 - 11.59*
*ராகுகாலம்: 02.59- 04.29*
*(யாவும் பழைய நேரப்படி)*

# வெள்ளப்பெருக்கு பாதித்த அரசஅலுவலருக்கு முற்பணக்கடன்

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர், ஆசிரியர்களுக்கு ஒருமாதச் சம்பளம் முற்பணக் கடனாக வழங்கப்படவுள்ளது.

வெள்ளப் பெருக்கு விசேட முற்பணக் கடனாகச் சம்பந்தப்பட்ட ஊழியரின் ஒரு மாதச் சம்பளத் தொகை (படிகள் நீங்களாக) வழங்கப்படவுள்ளது.


இது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது. பிணைகள் எதுவும் இன்றி ஊழியரின் விருப்பக் கோரிக்கையின் பேரில் வழங்கப்படவுள்ள கடன் 10 மாதங்களில் சமமான தொகையாக ஊழியரின் சம்பளத்தில் இருந்துதிருப்பி அறவிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, பொலன்னறுவை, அநுராதபுரம், நுவரேலியா ஆகிய மாவட்டங்களுக்கு இந்த விசேட முற்பணக்கடன் வழங்கப்படவுள்ளது.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இந்தக் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.(எ-11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
05 - 08 - 1984



இறைவன் அடியில்
22 - 06 - 2004

## அமரர் நவரத்தினராசா நிமல்

ஓராண்டு கழிந்ததையா, உம் பார்வை விட்டகன்று
சொத்தான எம் சொந்தமே! சோகங்கள் தீரவில்லை.
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள்
உருவம் மட்டும் எம் நெஞ்சைவிட்டு அகலவில்லை.
இனியென்ன என்றிருக்கவும் எம்மால் முடியவில்லை.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (11.07.2005) திங்கட்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (37589)(42)

திரு.த.நவரத்தினராசா(அப்பா)
திருமதி ந.விமலேஸ்வரி (அம்மா)
செல்வி. ந.கீதா (தங்கை)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### செல்வி நல்லையா பஞ்சரத்தினேஸ்வரி

(ஸ்ரீமா)



| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 07.03.1966 | 22.07.2004 |

காலனவன் கவர்ந்து சென்று
காலமும் பன்னிரு திங்கள்
சென்றனவே!
உடன் பிறந்தோருடன்
உறவுகளும்
உன் நினைவாய் தவிக்கின்றனரே!
எங்கு சென்றாய் எம் ஸ்ரீமாவே?

இன்று (11.07.2005) திங்கட்கிழமை முற்பகலில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
சந்திரபுரம் மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
தகவல் : **கா.ரூபன்** (மைத்துனர்).

பஸ்நிலைய வீதி,
சுன்னாகம்.

## வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

மாதகல் காந்திஜி சனசமூக நிலையம், மாதகல் வடக்கிலுள்ள செபஸ்தியார் வீதியைப் புனரமைப்புச் செய்துதருமாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளரை கடித மூலம் கேட்டுள்ளது.

இந்தவீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக திருத்தப் படாது மக்கள் போக்குவரத்திற்குச் சீர்கெட்ட நிலையில் இருந்து வருவதாகவும் -

மழை காலம் ஆரம்பிக்கும் முன்னர் இவ்வீதியை புனரமைத்து தருமாறும் - இக் கடிதத்தில் மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-135)

## ITI இன்

புதிய பிரிவிற்கான
வகுப்புகள் ஆரம்பம்
**15.07.2005**

- ★ A.A.T. வகுப்புகள்
- ★ கணனி வகுப்புகள்
- ★ Spoken English

குறிப்பு : கணனி வகுப்புக்காக முதல் அனுமதி பெறும் 15 மாணவருக்கு **80%** கழிவு வழங்கப்படும்.

**Intense Training Institution**

ஸ்ரேசன் றோட்,
மல்லாகம். (37576)(22-16-46)

நிர்வாகி.

## விற்பனைக்கு

SHARP (SF7800) Model Photo copy இயந்திரம் ஒன்றும் 2.1 KW இங்கிலாந்து Genarator ஒன்றும் Molinen, Intertnonic வகை அவுண் இரண்டும் sony 21" T.V., பலமுழ நீளங்களில் பனைமரங்களும் NPGTXXXX இலக்கமுடைய CD100 S இன மோட்டார் வாகனமும் NOKIA 3310 வகையைச் சார்ந்த கைத்தொலைபேசியும் Panasonic NVSX 3EG வகை SLIM PRO SX3 வீடியோக் கமராவும் P1இன Gateway 2000 வகை C.P.U., Dramond view வகை MONITOR என்பன உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளிற்கு: **திருமதி க.பாலயோகன்**
021 222 7085; 021 222 8039,
0777162428 (37568)(42-16-46)

உ

### புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம்,
### பிட்டியம்பதி
## ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
## தேர்த்திருவிழா



*அம்பிகை அடியார்களே!*
எம்பெருமாட்டிக்கு வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வருகிறது. இன்று (11.07.2005) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அம்பிகை தேரில் ஆரோகணித்து திருவீதி வலம் வரும் காட்சி இடம்பெறும்.
*அன்பர்கள் வருக! அம்பிகை அருள் பெறுக!*

– விழா உபயகாரர்.

(37549)(22-16-46)

உ

### சரவணை, வேலணை சங்குத்தறை
## அருள்மிகு ஞானவைரவப் பெருமான் தேவஸ்தான



புனராவர்த்தன நூதன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா
**மஹா கும்பாபிசேகம் 13.07.2005**

இன்று (11.07.2005) திங்கட்கிழமை
மு.ப.10 மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகும்.

நாளை (12.07.2005) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

13.07.2005 புதன்கிழமை காலை 6 மணிக்கு ஸ்தூபிகள் அபிசேகம் நடைபெற்றுத் தொடர்ந்து 6.50 மணிக்குள் மகாகும்பாபிசேகம் இடம்பெற்று மங்கள தரிசனம், ஆசியுரைகள், மகா அபிசேகம் என்பன நடைபெறும்.

☛ தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிசேகம் நடைபெற்று 24.07.2005 இல் சங்காபிசேகம் நடைபெறும்.

*பிரதிஷ்டா பிரதமகுரு :* சொ.வரதராஜக் குருக்கள்

★ அடியார்கள் அனைவரும் வந்து எம்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

அறங்காவலர்
தில்லைநாதர் நடராஜா,
சுசிலா.

*ஞானவைரவர் தேவஸ்தானம்,*
*சரவணை, வேலணை.* (37577)(22-16-46)

# கணேசன் - ஹாட்வெயர்
## வர்ண வங்கி திறப்புவிழா

Multilac
www.multilac.com




வர்ண
உலகில்
புரட்சி

Coloris France
The Colourbank

காலம்: 11. 07. 2005
நேரம்: 11.30 - 12. 30

**11. 07. 2005**
கணேசன் ஹாட்வெயர்
பிரதான வீதி, நெல்லியடி. T.P.: 021 - 226 3290

**12. 07. 2005**
வர்ண வங்கித் திறப்பு விழா
கந்தவேலன் ரேடர்ஸ்
இல: 110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P.:- 021 - 222 2822

**13. 07. 2005**
வர்ண வங்கித் திறப்பு விழா
பாண்டியன் வாணிபம்
யாழ். சாலை,
கிளிநொச்சி.
T.P.:-
021- 228 5844,5

SGS UKAS SLS WINNER OF NATIONAL AND NCE GOLD AWARDS FOR EXPORT EXCELLENCE Micron Auto Coloris France Colourbank Mitsuko Auto Colourbank

(C/42006)

COLORIS FRANCE Colourbank

# உதயன் - சுடர் ஒளி

## கிளைப் பணிமனை வவுனியாவிலும்!

நாளை செவ்வாய்க்கிழமை(12.07.2005)
காலை 9.00 மணிக்கு
இல. 58, முதலாம் குறுக்குத் தெருவில்
கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகிறது.

**அன்பார்ந்த**

**வவுனியா மாவட்டம் வாழ் மக்களே!**

உங்கள் அவசர, அவசிய, முக்கிய தகவல்கள் குடாநாடு, வன்னிப் பிரதேசங்களில் உறவுகளையும் இலட்சக் கணக்கான வாசகர்களையும் சென்றடைய **உதயனிலும்** -

வவுனியா, கொழும்பு, மலையகம், கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள வாசகர்களைச் சென்றடைய **சுடர் ஒளியிலும்** வெளிப்படுத்துங்கள்

**வர்த்தகர்களே!**

உங்கள் வியாபாரத்தைப் பல மடங்கு பெருக்கிக் கொள்ள அரியவாய்ப்பு!

நாளை முதல் உங்கள் சொந்த இடத்திலேயே அறிவித்தல்களை நேரில் கையளிக்க வாய்ப்பு!

வாருங்கள்! உங்களை நேசத்துடன் வரவேற்கக் காத்திருக்கின்றோம்.

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி **மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி** (ஆசிரியை)

தோற்றம் 01-05-1930 மறைவு 13-06-2005

எமது இல்ல ஒளிவிளக்காய் எமையெல்லாம் காத்துவந்த
எமதருமைத் தாயே! எம்குருவே! எம் தெய்வமே எங்குற்றீர்?
தேடித் தேடி அலைகின்றோம் தேறவழி காணோமே - மாதமொன்று
ஓடி மறைந்தாலும் உன் நினைவோ மாறுதில்லை!

அன்னாரின் அந்தியேஷ்டி நாளை (12.07.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் சபிண்டீகரணம் 13.07.2005 புதன் பகலும் அடுத்து மதியபோசனமும் நிகழும் உற்றார், உறவினர் உடனாசிரியர், மாணவர் அன்பர்கள் அனைவரும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்தேகுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

வல்வெட்டி. (37398)(21-14)

கணவர், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

---

### தொல்புரம் ஆஸ்பத்திரிக்கு இரண்டாவது தொகுதி மருந்துகள்

தொல்புரம்,ஜூலை11

தொல்புரம் பானாவெட்டி வைத்திய சாலை, வட்டுக்கோட்டை மத்திய வைத்திய சாலை ஆகியவற்றிற்கு இந்த ஆண்டுக் கான இரண்டாவது தொகுதி மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

கடந்த சில மாதங்களாக இந்த வைத்திய சாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவி வந்ததால் அநேகமான மருந்துகளை நோயா ளர்கள் தனியார் மருந்தகங்களில் பணம் கொடுத்து வாங்கிவந்தனர். (எ-118)

### வினாடி வினாப்போட்டி

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை மாண வர்களுக்கிடையிலான விஞ்ஞான வினாடி வினா போட்டி, கணிதபாட வினா விடைப் போட்டி என்பன இம்முறை தனித்தனிப் போட்டிகளாக நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டத்திலான போட்டிகள் அந் தந்தக் கோட்டங்களில் இன்று திங்கட்கிழமை யும் எதிர்வரும் 13ஆம், 15ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

தரம் 6,7இற்குரிய போட்டிகள் 11ஆம் திகதியும், தரம் 8,9 இற்குரிய போட்டி கள் 13ஆம் திகதியும், தரம் 10, 11இற் குரிய போட்டிகள் 15ஆம் திகதியும் நடை பெறும். இப் போட் டிகள் யாவும் பிற் பகல் இரண்டுமணிக்கு இடம்பெறும்.

தெல்லிப்பழைக் கோட்டப்போட்டிகள் மல்லாகம் மகாவித்தி யாலயத்திலும் உடு வில் கோட்டப் போட் டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி யிலும் சண்டிலிப்பாய் கோட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், சங் கானைக் கோட்ட போட்டிகள் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியிலும் நடை பெறும். என அறி விக்கப்பட்டுள்ளது. (எ-152)

---

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**தியாகராசா திருஞானம்**

(ஞானம்)

தோற்றம் 29-10-1938 மறைவு 23-06-2004

*(திதி: பூர்வ பக்க பஞ்சமித்திதி - 11-07-2005)*

எங்கள் அன்பு அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாகியதே!
ஆறவில்லை எம் துயரம் ஆதரவு யார் எமக்கு?
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?
அவை யாவும் உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டுகள் எத்தனை உருண்டோடினாலும்
உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சங்களில்
நிறைந்தேயிருக்கும்

உங்கள் ஆத்மசாந்திக்காகத் தினமும்
இறைவன் திருவடிகளை வேண்டுகின்றோம்

*வரணி இயற்றாளை,*
*வரணி*

(37505)(21-

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

### ஒரு வருட நினைவுகளில்...



அமரர்

**அப்புக்குட்டி தங்கராசா**

தோற்றம் 01.10.1932 மறைவு 22.06.2004

எம் உயிரோடு உயிராக
மனதோடு மலையாக வாழ்ந்துவிட்டு
நிலையாக பிரிந்தாயா ஐய்யா...?
இல்லை! இல்லை!
எம் நினைவோடு முழுநாளும்
நிலையாக வாழ்கின்றாய் ஐய்யா...

**கீரிமலை வீதி, சித்தன்கேணி.**

**குடும்பத்தினர்.**

(37562)(21-14-45)



உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீக குரு
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி யின்
**வாழும் கலைப் பயிற்சி**

(பிராணயாமம், பாஸ்திரிகா, சுதர்சன்கிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடங்கியது)

* மனஇறுக்கம், மனஉளைச்சல் நீங்கி தெளிந்த மனம், அமைதி, தன்னம்பிக்கை வளர
* இரத்தக் கொதிப்பு, ஆஸ்துமா, நீரிழிவு, ஒற்றைத் தலைவலி போன்றவற்றை நீக்கி உடல் ஆரோக்கியம் பெற
* தன் சக்தி அறிந்து, உள் உணர்ந்து ஆன்மீக வழியில் வளர்ந்து உற்சாகமும் ஊக்கமும் கொண்டு செவ்வனே பணி செய்ய அனைவரும் மேற்கொள்ள வேண்டிய பயிற்சி

**இலவச அறிமுக உரை**

நாள்:- இன்று (11.07.2005) திங்கட்கிழமை மாலை 6.00 மணி
இடம்:- மானிப்பாய் கோவிற்பற்று பாலர் பாடசாலை
தேசிய சேமிப்பு வங்கி எதிரில்,
யாழ் வீதி, மானிப்பாய்.

பயிற்சி நாள்கள் :- 12.07.2005 செவ்வாய்க்கிழமை முதல்
17.07.2005 ஞாயிற்றுக்கிழமை வரை

பயிற்சி நேரம் :- காலை 6 மணிமுதல் 8 மணிவரை
அல்லது
மாலை 6 மணிமுதல் 8 மணிவரை

அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்
அனைவரும் வருக!

மேலும் விவரங்களுக்கு:-
வாழும் கலைஅற நிறுவனம், யாழ்ப்பாணம் மையம்.
தொ.பே. 077 9059 549, 077 9059 544.
www.artofliving.org
(37499)(42-19)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 - 03 - 1934



இறப்பு 11 - 07 - 2004

## அமரர் பறுநாந்து டோமினிக்

(பிஸ்கால், யாழ்ப்பாணம்)

ஆயிரம் உறவிருந்தென்ன
உங்கள் உறவில்லையே - எமக்கு

எம்நெஞ்சை விட்டு அகலாது!

16, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(37567) (14-42)

## நீங்காத நினைவில் மூன்றாண்டுகள்

மலர்வு 1957 - 10 - 24



உதிர்வு 2002 - 07 - 15

அமரர்
## நாகலிங்கம் கந்தசாமி
திதி: 11-07-2005

எங்கள் அன்பின் ஒளிவிளக்கே!
ஆண்டுகள் பல உருண்டோடினும்
உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சங்களில்
என்றும் நிறைந்தேயிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன்
திருவடிகளை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

56, முள்ளி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

என்றென்றும் உங்கள்
நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்.

(37584)(42-14)


**தேவை**

நோயாளியைப் பராமரிப்பதற்கும் வீட்டுப் பணிகளைச் செய்வதற்கும் ஒரு பெண் ஆயா தேவை. விரும்பியோர் தொடர்புகொள்ளவும்.

முகவரி: இ.இராசமணி,
No.:11, பொன்னம்பலம் லேன்,
உடுவில் றோட், மானிப்பாய்.
(37817) (42-14)

**தேவை**

வட்டுக்கோட்டையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவுள்ள பார்மசி & குறோசறிக்கு அனுபவமுள்ள பெண் ஊழியர் உடன் தேவை. தகுதி உடையோர் உடன் தொடர்புகொள்க.

தொலைபேசி இல. 077 6118212
077 3288795

முகவரி:
சி.இரத்தினசோதி
பொன்னையா சதுக்கம்,
குளிப்பன் வீதி,
வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை.
(37558) (25-14)

ௐ
ஓம் சக்தி
**கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்**
**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

கொடியேற்றம்: ஆனி 27 ஆம் நாள் (11.07.2005) திங்கட்கிழமை
தேர்: ஆடி 04ஆம் நாள் (20.07.2005) புதன்கிழமை
தீர்த்தம்: ஆடி 05ஆம் நாள் (21.07.2005) வியாழக்கிழமை
மஹோற்சவ குரு: ஸ்ரீ வத்ஸ வ.இராஜேஸ்வரக் குருக்கள்
(பிரதம குரு, ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் - வண்ணை)
ஆலய குரு: பிரம்மஸ்ரீ இ.இராமலிங்கசர்மா
அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!.

கோணாவளை வீதி,
கொக்குவில்.
- ஆலய பரிபாலன சபை
(37554)(42)

விளம்பர அனுசரணை:
துர்க்கா தேவி அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆதிரா மெடிக்கல்**
புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## Save the Children
in Sri Lanka

### Expression of interest for partnership

Save the Children in Sri-Lanka (SCiSL) will start a three year period project in Jaffna, funded by USAID. The main objective is to insure inclusion of children affected by the conflict. The project will focus on community-based approaches, social mobilization.

The SCiSL is looking for experienced and committed partners in the following areas:

- Community and social mobilization
- Child participation/ child rights
- Social work in communities

*Essential requirements*

- Extensive experience working in Jaffna peninsula
- Excellent understanding of child protection government bodies
- Good knowledge of the areas of the main issues affecting children

*Method of selection*

All organizations interested in this project will get a 3 pages application form which can be collected from SCiSL office in Jaffna. A selection committee will identify potential partners. An organizational assessment of potential partner will determine the selected partners.

(C/43990)(42)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
09.02.1942

விண்ணில்
22.06.2004

காதுகளில் ஒலிக்குது ஐயா
உங்கள் கனத்த குரல் - இங்கு
கதிகலங்கி நிற்கின்றோம் நாம் எல்லாம்
இருவிழிகளும் காயவில்லை ஐயா - இன்னும்
உங்கள் நினைவுகளும் ஓயவில்லை!
முதலாம் ஆண்டு நினைவினிலே - உங்கள்
ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

## அமரர் இராசன் அண்ணாச்சாமி

நாவலடி,
உடுப்பிட்டி.

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(37578) (14-42)

# தமிழர் தாயகப் பிரதேசத்துக்கென ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்

கிளிநொச்சி,ஜூலை11

வடக்கு - கிழக்குத் தாயகப் பகுதிக்கான ஒட்டு மொத்தமான சுகாதாரத் திட்டமொன்றை தமிழீழ சுகாதார சேவை வரைந்துள்ளது.

அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் அத்திட்டத்துக்குள் அடங்கும் வகையில் தமது வேலைத்திட்டங்களை இனங்கண்டு அதற்கான அனுமதி பெற்றுச் செயற்படுத்துவது எமது பிரதேசத்தின் உண்மையான சுகாதார மேம்பாட்டுக்கு உதவும் என நம்புகின்றோம்.

தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

நாகரிக உலகின் அபிவிருத்திக்கேற்ப சுகாதாரப் பிரச்சினைகளும் அதிகரித்துக் கொண்டு செல்வதுடன், அவற்றுக்கான பரிகார பரிமாணங்களும் விரிவடைந்து செல்கின்றன. இதனால் எவ்வளவு வளங்களைச் செலவு செய்தாலும் மேற்படி சுகாதாரப்பிரச்சினைகள் தீர்க்கப்படாதவையாகப் புதிய வடிவங்களில் தோற்றம் பெற்றவண்ணமே உள்ளன. இந்நிலையில் எமது செயற்பாடுகள் அந்தந்தப்பிரதேச சமூக, கலாசார, புவியியல், அரசியல் பின்னணிகளிற்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படாவிடில் நாம் செலவிடுகின்ற வளங்கள் யாவும் விழலுக்கிறைத்த நீராகிப் போவதுடன், பொன்னான காலமும் விரயமாகிவிடுகின்றது. இதனைக் கடந்தகால நிகழ்வுகள் சான்று பகர்ந்து உறுதிப்படுத்துகின்றன.

இப்பிரச்சினைகள் தொடர்பாக ஏற்கனவே இனங்காணப்பட்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டு ஒருங்கிணைந்த கண்காணிப்பின் கீழான வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும் எனும் தீர்மானத்தின் கீழ் 1998ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தபோதும் 2002இன் பின்னர் ஏற்பட்ட போர்நிறுத்தக் காலத்திலும், சுனாமி அனர்த்தத்தின் பின்பும் எழுந்தமான சுகாதார வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகப்பகுதிக்கான ஒட்டுமொத்த சுகாதாரத்திட்டமொன்றினைத் தமிழீழ சுகாதார சேவையினராகிய நாம் வரைந்துள்ளோம். எனவே அனைத்து நிறுவனங்களும் அத்திட்டங்களுள் அடங்கும் வகையில் தமது வேலைத்திட்டங்களை இனங்கண்டு எமது அனுமதிபெற்றுச் செயற்படுவது எமது பிரதேசத்தின் உண்மையான சுகாதார மேம்பாட்டுக்கு இட்டுச் செல்லும் என நம்புகின்றோம். இதனைக் கருத்திற்கொண்டு இனிவருங்காலங்களில் சுகாதாரம் தொடர்பான வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள உத்தேசிக்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எவையாயினும் தங்கள் உத்தேசத் திட்டத்தினை எமக்கு முன்னளித்து எமது முதன்மைத் திட்டத்திற்குள் அமையக்கூடியவாறு தங்கள் திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுத்துவதன் மூலம் சீரான, உண்மையான சுகாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)


## ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கும்பாபிசேகம்

ஒட்டுசுட்டான்,ஜூலை11

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பிரதிஷ்டா மகா கும்பாபிசேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிசேகத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க் கிழமையும் பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவர். (எ-341-203)

## சுகாதார விழிப்புணர்வு அரங்காற்றுகை நிகழ்வு



வட்டக்கச்சி,ஜூலை11

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் நலன்புரி முகாம்களில் கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தினரால் சுகாதார விழிப்புணர்வு அரங்காற்றுகை நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

'ஒக்ஸ்பாம்' நிறுவன அனுசரணையுடன் அழகியல் கலாமன்ற மாணவர்கள் இந்த ஆற்றுகை நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

'சுகம்' என்னும் தலைப்பிலான இந்த உடல்நல சுகாதார விழிப்புணர்வு ஆற்றுகையானது கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் வடமராட்சி கிழக்கிலும் முல்லைத் தீவிலும் நடத்தப்பட்டுவருகின்றன.

48 இடங்களில் இந்த ஆற்றுகை நிகழ்வு நடத்தப்படும் என்றும் -

தற்போது 12 இடங்களில் ஆற்றுகைகள் நடத்தப்பட்டுள்ளன என்றும் -

அழகியல் கலாமன்ற அதிபர் ச.விஜயசேகரர் தெரிவித்தார். (எ-405-203)

## இரணைமாதாநகர் மக்களுக்கு சுயதொழில் முயற்சிக்குக் கடன்

பரந்தன்,ஜூலை11

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனும், நிகொட் திட்டத்தின் அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இரணைமாதா நகர்ப் பகுதியில் சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கியுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி இரணைமாதா நகர் கிராம சொக்கலிங்கம் பூங்கா வளாகத்தில் நடைபெற்றது.

சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் சூ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் செயற்றிட்ட இணைப்பாளர் யோ.கோபி ஏற்றினார்.

கரும்புலி மாவீரர்களிற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன.

கருத்துரைகளை, நிகொட் திட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சிவச்செல்வன், நிகொட் செயற்றிட்ட இணைப்பாளர் யோ.கோபி, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.சூசைநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி கடன் திட்டத்தின் கீழ் 46 பயனாளிகளுக்கு மீன்பிடி, சிறுவியாபாரம், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற தொழில் முயற்சிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகளின் தலைவர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-352-204)

## புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நான்கு கிராமங்களில்அபிவிருத்தி

புதுக்குடியிருப்பு,ஜூலை11

நியாப் II திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நான்கு கிராமங்கள் மையக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

தேராவில், தேவிபுரம் உட்பட நான்கு கிராமங்களே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் தலா 3 கிணறுகள் (பொதுக் கிணறுகள்) வீதிகள் என்பன அமைக்கப்படவுள்ளன.

அதேவேளை - ஒவ்வொரு கிராமத்திற்கும் சுழற்சிமுறைக் கடனாக தலா 9 லட்சம் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் பொது நோக்கு மண்டபங்களும் அமைக்கப்படவுள்ளன எனப் பிரதேச செயலர் சி.தயானந்தா தெரிவித்தார். (எ-353)

## கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் மேலும் பலருக்கு அடையாள அட்டைகள்

பரந்தன்,ஜூலை11

கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு தேசிய அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்களினதும் புதிதாக விண்ணப்பித்தவர்களினதும் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்துள்ளன.

பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாள அட்டைகளை மீளப் பெறவும், புதிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கவும், இந்தப் பிரதேசத்தில் ஆள்பதிவுத் திணைக்களத்தால் கடந்த மாதங்களில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்கேற்றிருந்தனர்.

ஒரு தொகுதி அடையாள அட்டைகள் ஏற்கனவே பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றன என்றும்-

தற்போது இன்னொரு தொகுதி அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும்- பிரதேசசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கிடைக்கப் பெற்றுள்ள அடையாள அட்டைகளை உரியவர்கள் விரைவில் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் - அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகக் கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகளின் எண்ணிக்கை வருமாறு:-

கண்டாவளை-22, பரந்தன்-24, தருமபுரம்-11, உமையாள்புரம்-5, புன்னைநீராவி-4, ஊரியான்-2, புளியம்பொக்கனை 6, கல்மடுநகர்-4, கல்லாறு-11, தட்டுவன் கொட்டி-10,கோரக்கன்கட்டு-5, பெரியகுளம் -4, பிரமந்தனாறு-14, முரசுமோட்டை-45. (எ-352-204)

## கிளிநொச்சி கல்வி வலயத்தில் வினாடிவினாப் போட்டிகள்

வட்டக்கச்சி,ஜூலை11

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 2005ஆம் ஆண்டுக்கான கோட்ட மட்ட கணித, விஞ்ஞான வினாடிவினாப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

தரம் 6 தொடக்கம் தரம் 13வரையான மாணவர்களிடையே வகுப்புரீதியாக பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் கோட்ட மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற முடியும்.

எதிர்வரும் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு - பளை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் பளை மத்திய கல்லூரியிலும்-

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் பூநகரி மகா வித்தியாலயத்திலும்-

கண்டாவளைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் தர்மபுரம் மகாவித்தியாலயத்திலும் -

கரைச்சிக் கோட்டத்தின் கிழக்குப் பகுதிப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும்- நடைபெறும் என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தெரிவித் தார்.

கோட்டமட்டப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள், வலயமட்டப் போட்டிகளில் பங்கு பற்றமுடியும் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (எ-405-203)




## முல்லைத்தீவில் வழங்கப்பட்டுவரும் நிவாரண அரிசி குறித்துப் புகார்

ஒட்டுசுட்டான்,ஜூலை11

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமாக வழங்கப்படும் அரிசி பாவனைக்கு உகந்ததாக இல்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் கருத்துத் தெரிவிக்கையில்:-

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ளை அரிசி வழங்குவதை உடன் நிறுத்துமாறு உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் அரிசியினை பயன்படுத்த ஆவன செய்யவேண்டும் என்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (எ-341-204)

## ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருட்டு

கிளிநொச்சி,ஜூலை11

கிளிநொச்சி - கனகபுரம் டிப்போ வீதியில் உள்ள மூன்று வீடுகளில் அண்மையில் ஒரே இரவில் பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

குறிப்பாக, ஒரு தொகுதி நகைகள் ஒரு தொகைப்பணம் என்பன இவ்வாறு திருட்டுப் போயுள்ளன எனக் கூறப்பட்டது.

இதேவேளை, இப்பகுதியில் இரவுவேளைகளில் இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அடிக்கடி இடம்பெறும் திருட்டுக்கள் காரணமாகவும் இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் காரணமாகவும் இப்பகுதி மக்கள் இரவுப் பொழுதை அச்சத்துடன் கழிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-305-203)



# Restoring the Livelihoods of Tsunami Victims

Restoration of livelihoods to families is a key protection factor for all children affected by the Tsunami. In the aftermath of Tsunami, Save the Children in Sri Lanka engaged into a series of projects through partner organisations aiming to restore community and household economies by replacing lot productive assets and providing financial support. These projects are being implemented in Ampara, Batticaloa, Jaffna, Kilinochchi, Matara and Trincomalee Districts.

We are looking for committed, energetic, dynamic individuals to join our team.

Vacancies exist for the following positions:

## Partnership Development Manager

The Partnership Development Manager is responsible for the development implementations, and monitoring of programmes to achieve SCiSL's mission through partner organisations. The Partnership Development Manager is also responsible for playing a proactive role in advocacy at different levels. The work involved includes programme planning and management, budgetary responsibilities, management reporting and line management responsibilities.

**Base Stations : Batticaloa, Jaffna and Kilinochchi**

Qualifications and Experience:

*Essential*

- Post Graduate degree in Social Sciences.
- About 5 years of experience in the area of development of livelihoods.
- Analytical skills and experience in project planning and field experience with programme management.
- Experience in advocacy initiative.
- Skills related to computer literacy, financial management and report writing.
- Command of written and spoken English with fluency in one or more of the local languages.
- Ability and willingness to travel to all parts of the country.
- Strong interpersonal skills with special emphasis on managing teams.
- Skills related to training and capacity building of local partners.

*Desirable*

- Good understanding of government structures.
- Contacts within the NGO community, donor agencies and government departments.
- Previous experience with development interventions in the area of Child Rights.
- Knowledge of third national language.

## Partnership Management Officer

The Partnership Management Officer is responsible for the day to day coordination of Programme Partnerships supervised by the Partnership Development Manager. The Partnership Management Officer has responsibility for programme implementation at district level and is expected to take initiatives to improve the quality of the cooperation with partners.

**Base Stations: Ampara, Kilinochchi and Trincomalee**

Qualifications and experience:

*Essential*

- Graduate degree in Social Sciences or equivalent with preferably 3 years experience in development organisations.
- Good analytical skills and field experience in programme management.
- Understanding of development issues related to children.
- Ability to innovate along with a positive attitude to learn from communities.
- Skills related to participatory methods, computer literacy and financial management.
- Good knowledge of written and spoken English with fluency in one or more of the local languages. Skills in report writing.
- Ability and willingness to travel to all parts of the country. Good personal and liaison skills.

*Desirable*

- Exposure to development interventions in the area of Child Rights.
- Experience in working with partners.
- Knowledge of third national language.

*A highly competitive remuneration package awaits the selected candidates.*
The above positions would be initially for a period of one year.

*Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.*

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Please ensure that the names of two non-related referees are provided.

Applications together with an approx. 300 word hand written essay on how your previous work experience will assist in fulfilling the requirements of the above post, should be submitted to:

**Save the Children in Sri Lanka**
**Human Resources Unit,**
**58A, Horton Place, Colombo 7**
**Closing Date-21st July 2005**

Only applicants selected for the interview will be contacted.
No telephone inquiries please.

(C/43988)(42)

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on Education, Children Affected by Armed Conflict/Disaster and Social Harmony and Peace. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

## நடமாடும் சேவை

கொழும்புத்துறைப் பகுதி மக்கள் சுய தொழில்களை ஆரம்பிக்கும் பொருட்டு கடன் வழங்கும் நடமாடும் சேவை ஒன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

(எ-204)

## பயிற்சிப் பட்டறை

புதிதாக நியமனம் பெற்ற முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று அரச சேவைப் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் இன்று திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ந்து 5 தினங்களுக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் தாபனக் கிளை, கணக்குக் கிளை, திட்டமிடல் பகுதி என்பவற்றில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

(எ-139-202)

## பரிசோதனை முகாம்

வலி.தெற்கு,ஜூலை11

உடுவில், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கு கண்பார்வைக்கான கண்ணாடி, காது கேட்டலுக்கான உபகரணங்கள் என்பனவற்றை வழங்குவதற்கான பரிசோதனை முகாம் நாளை செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(எ-152)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலி.தெற்கு,ஜூலை11

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயக் குழுக் கூட்டம் நடைபெறும்.

(எ-152)

**படிவம்**
**S.L.A.S**

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி :
2005.08.01

Bharathi Pathippakam
Off - Set & letter Press Printers
430, K. K. S. Road, Jaffna.

## Save the Children
in Sri Lanka

New beginning for children victims of conflict and violence Social protection of children

Save the children in Sri-Lanka will start a three year long project in Jaffna funded by USAID.

The project has three objectives

1- To enable children affected by the conflict to be reintegrated into their families/communities
2- To protect children from violence and abuse in home and community contexts
3- To develop alternatives to institutional care for children at risk

***Positions Vacant - Jaffna***

2 Field Officers (FO)

A field officer assists partners in project implementation and monitor progress against targets/objectives. 60-70% of FO's time is spent in field activities. Furthermore FO refers to operational plans in order to implement activities.

*Essential*

- Graduate in Social Sciences or any other related field
- Willingness and skills to work in communities and children's clubs
- Good analytical skills and excellent knowledge of monitoring tools
- Understanding of development issues related to children
- Good knowledge of government structures in charge of child protection
- Able to understand written English

*Desirable*

- Command of written and spoken English
- Experience working in communities

SCiSL will give special attention to motivated young graduates committed to improve children's lives

***Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.***

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before 18th July 2005 to:

**Save the Children in Sri Lanka,**
146, Temple Road, Nallur Jaffna.

* No telephone enquiries please.
* Only short listed candidates will be contacted.

(C/43989)(42)

## Save the Children
in Sri Lanka

We are looking for a committed & energetic individual to join our team as:

***Partnership Management officer- Education***

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work closely with Partnership Development Manager to contribute to the day to day running of SCiSL programmes.

**Base Station: Jaffna**

Qualifications and experience:

*Essential*

- Degree holder in relevant field
- About three years work experience in a related field
- Good analytical skills and field experience in programme management
- Understanding of development issues related to children
- Skills in report writing
- Ability and willingness to travel to all parts of the country.
- Good personal and liaison skills
- Computer skills in Excel and Word
- Good in English and fluency in either Sinhala or Tamil
- Good organizational skills

*Desirable*

- Exposure to development interventions in the area of Child Rights.
- Experience in working with partners.
- Knowledge of third national language.

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

***Duration :***

The above position would be initially for a period of one year.
The post will involve travel to other parts of the country.
Please note that all positions in SCiSL are subject to transfer.

***Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.***

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before 18th July 2005 to:

**Save the Children in Sri Lanka,**
**146, Temple Road, Nallur Jaffna.**

- No telephone enquiries please.
- Only short listed candidates will be contacted.

(C/43987)(42)

# கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்புமலர் – 11.07.2005




## மகோற்சவ பிரதம குரு அவர்களின் ஆசியுரை

கோண்டாவில் கிழக்கு ஆசிமடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற விநாயகப் பெருமானுக்கு இன்று (11.07.2005) தேர்த்திருவிழா. விநாயகப்பெருமான் ஐந்தொழில்களை ஆற்றி இன்று ஆன்மாக்களுடைய பாவங்களை அழிக்கும் பொருட்டு தேரேறி வருகின்றார். இவ்வாறு தேரேறி வருகின்ற விநாயகப்பெருமானை "ஆ நோ பத்ரா க்ரதவோ யந்து விஸ்வ தோர தபீ தா ஸோ அபரிதாஸ உத்பித தேவாநோ யதா ஸதமித்விருதே அஸன் ப்ராயுவோ ரசஷிதாரோ திவேதிவே" (இ.வே.1.89)

"தீமை கலவாத தடையற்ற தடைகளை உடைக்கவல்ல மங்கலமான எண்ணங்கள் எல்லாத்திசைகளிலிருந்தும் நம்மை நோக்கி வருவதாக. தேவர்கள் எப்போதும் நமக்கு இன்பத்தை வளர்ப்பார்களாக. தேவர்களின் நல்லாசிகள் நிலவட்டும் அவர்களின் வரங்கள் பெருகட்டும் இங்கே நீண்ட காலம் வாழ்வதற்கான ஆயுளை அவர்கள் தரட்டும்" என்று எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி ஆசிகூறுகிறேன்.

**சிவாகம கிரியாரத்தினம்**
**சிவஸ்ரீ நா. ஹரீந்திரக்குருக்கள்.**

## நித்திய அர்ச்சகர் அவர்களின் ஆசியுரை

கோண்டாவில் கிழக்கில் கோயில் கொண்டு பக்தர்களைக் காத்துவருகின்ற விநாயகப் பெருமானுக்கு இன்று ரதோற்சவம் இடம்பெறுகின்றது. தேரை அசைப்பதாயின் எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும். தனியே தேரை அசைத்துவிட முடியாது. எல்லோரையும் இணைக்கின்ற ஓர் இடமாக ஆலயம் விளங்குகின்றது. மனிதர்களுக்கிடையில் ஒற்றுமையை (அதர்வ வேதம்3.30) பின்வருமாறு கூறுகிறது.

ஸஹ்ருதயம் ஸாம்மனஸ்ய மவித் வேஷம் க்ருணோமி வ அன்யோ அன்யமபி ஹ ர்யத வத்ஸம் ஜாதமி வாக்ன்யா

ஒரே உள்ளத்தினராக வெறுப்பு அற்றவர்களாக கன்றினைத் தாய்ப்பசு நேசிப்பது போல ஒருவரை ஒருவர் நேசியுங்கள். மகன் தந்தையைப் பின் தொடரட்டும். கணவன்–மனைவி அமைதி தருகின்ற வார்த்தைகளைப் பேசட்டும். சகோதர சகோதரிகள் ஒருவரையொருவர் வெறுக்கக்கூடாது. எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு நோக்கத்திற்காகப் பாடுபடுங்கள் நன்மையான வார்த்தைகளை பேசுங்கள். என்று வேதம் கூறுகின்றது. இன்றைய தேர்த்திருவிழாவும் ஒரு சமூக ஒற்றுமையைக் காட்டுகின்றது. நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக, சகோதரர்களாக வாழ்ந்து ஜீவன் முத்தி அடைய வேண்டும் என்று விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

**பிரம்மஸ்ரீ நா. கார்த்திகேயசர்மா**

## கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

**சீர்மிகு நம் ஈழத்திருநாட்டின் வடமாகாணத்தின் கண்ணே யாழ் நகரிற் கோண்டாவில் கிராமத்தின் கிழக்குத் திசையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆசிமட அரசடி விநாயகப் பெருமானின் ஆலயத்திருப்பணி வேலைகளும், நித்திய, நைவேத்தியங்களும், அப்பெருமானின் அருளாலும் விநாயகர் அடியார்களது ஆதரவினாலும் சிறப்புற இனிது நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே.**

## விநாயகப் பெருமானின் தான்தோன்றிய வரலாறு

ஏறக்குறைய 18 ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய ஆசிமட அரசடி விநாயகர் மிகவும் அற்புதமானவர். இப்பொழுது இவ்வாலயம் அமைந்துள்ள பகுதியும், இதனைச்சுற்றியுள்ள பிரதேசங்களும், ஆதிகாலத்தில் வயல் நிலங்களாக இருந்தன. அக்கால கட்டத்தில் உழவர்கள் ஏர்பூட்டி வயல் உழத பொழுது ஓர் இடத்தில் இரத்தம் தோய்ந்த மண் காணப்பட்டதாம். உழுத விவசாயிகள் உழவை நிறுத்திவிட்டு அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபொழுது அந்த இடத்தில் விநாயகப் பெருமானின் முழு உருவிலான விக்கிரகம் ஒன்று காணப்பட்டது. உடனே கிராமத்தவர்கள் விடயத்தை அறிந்ததும் அனைவரும் ஒன்று கூடி அந்தச்சிலையை மூல மூர்த்தியாக கொண்டு அவ்விடத்தில் ஏற்கனவே இருந்த ஆசி மடத்தின் அருகிலே பிரதிஷ்டை செய்து அதன் அரசமரம் ஒன்றையும் நட்டுவைத்தார்கள். அரசமரமானது இன்றும் தலவிருச்சமாக நிற்ப தைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அக்காலத்தில் விநாயகப் பெருமானுக்குத் தினமும் பூசை செய்யும் பொறுப்பை ஆசிமடப் பெண்கள் என்று சொல்லப்படும் இரண்டு பெண்கள் ஏற்று பூசைசெய்து வழிபட்டு வந்தார்கள். இவர்களுக்குப் பின் ஏரம்பு குருக்கள் என்பவரும் அவரைச்சார்ந்த பூசகர்களும் 1994 ஆம் ஆண்டுவரை பூசைசெய்து வந்தார்கள். அதன் பின் இன்றுவரை பிராமணர்களால் பூசை செய்து வருவது குறிப்பிடத் தக்கது.

இப்பெருமானுக்கு "ஆசிமட அரசடி விநாயகர்" என்னும் பெயரை ஆரம்பத்தில் ஓலைக்கொட் டிலாக இருந்து பிற்காலத்தில் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட கோயிலாக இருந்த வேளையில் அச்சுற்றாடலில் வசித்த அடியார் ஒருவர் சுண் ணாம்பிலான ஆலயத்தைத் தான் இடிப்பது போல கனவு கண்டு காலையில் எழுந்து விநாயகப் பெருமானை வணங்கச் சென்ற பொழுது ஆல யத்தின் ஒரு பகுதி உண்மையாகவே இடிந்து இருப்பதைக்கண்டு "இது விநாயகப்பெருமானின் கட்டளை" என ஏற்றுக் கொண்டுசுண்ணாம்புக்கட்டடத்தை இடித்துவிட்டு கர்ப்பக்கிரகத்தையும், அர்த்த மண்டபத்தையும் கொண்டிருந்த ஆலயத்தை அழகான பொழிந்த கற்களினால் கட்டி முடித்து திருக்குட முழுக்கும் செய்வித்தார். புத்திர பாக்கியமற்று இருந்த அவ்வடியாருக்கும் விநாயகப் பெருமான் மக்கட் செல்வத்தைக் கொடுத்தருளினார் என்பது வரலாறு.

இதன் பின்னர் மகாமண்டபம், கிருத்த மண்டபம், வசந்த மண்டபம் என்பன அழகாக கட்டப்பட்டு 1925 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆரம்பத்தில் அலங்கார உற்சவமாகவருடந்தோறும் நடைபெற்று பின்பு மகா உற்சவமாக மாற்றப்பட்டு இன்றும் அவ்வண்ணமே நடைபெற்று வருகிறது. மகா உற்சவமானது ஆனி உத்தரத்தில் தீர்த்தோற்சவத்தைக் கொண்டு முதல் பத்து தினங்கள் உற்சவம் நடைபெறும். முதலாவது நாள் கொடியேற்றத் துடன் ஆரம்ப மாகி 6 ஆம் நாள் பூச்சப்பரம், 7ஆம் நாள் கைலாச வாகனம், 8 ஆம் நாள் சப்பறம் 9 ஆம் நாள் தேர் உற்சவம் 10 ஆம் நாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

இந்த ஆலயத்தைச் சிறப்பாகப் பரிபாலிக்கும் நோக்கோடு 1959 ஆம் ஆண்டு அடியார்கள் ஒன்றுகூடி பரிபாலன சபை ஒன்றினை ஏற்படுத்திச் சிறப்பாகப் பரிபாலித்து வந்தார்கள். இக்கால கட்டத்தில் 1980 ஆம் ஆண்டு இவ் ஆலய அடியார்கள் விநாயகப் பெருமானுக்கு ஐந்து தள இராஜகோபுரம் அமைக்கவேண்டும் என விரும்பி நல்ல நாளில் அதற்கான தளமிடப்பட்டு வேலைகள் ஆரம்பமாகின இக்காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற நிலையினால் கோபுர வேலை சிறிது தாமதமாகி 1998 ஆம் ஆண்டு முழுமையாக நிறைவு எய்தியது.

இந்த ஆலயத்தை ஆதரித்துப் பரிபாலித்து வந்த ஆலய பரிபாலன சபையினரும் விநாயகப் பெருமான் அடியார்களும் அனைவரும் ஒன்று சேர்ந்து 23.05.1988 ஆம் திகதி அன்று ஒரு விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டி வழிபடுவோரின் நலன் கருதி கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர்.

நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் நியமித்துள்ளனர். நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினர் எம் பெருமானின் ஆலயத்தைக் குறைவின்றிப் பரிபாலித்து வருகின்றனர். இக் கால கட்டத்தில் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் முயற்சியாலும் அடியார்கள், உபயகாரர்களின் முயற்சியினா லும் விநாயகப் பெருமானுக்குப் பெரும் பொருட் செலவில் அழகிய கைலாச வாகனமும், அதனைத் தொடர்ந்து அழகிய சப்பரம் ஒன்றும் செய்விக்கப்பட்டு வருடாந்த உற்சவ காலங்களில் 7 ஆம் திருவிழாவின் அன்று கைலாசவாகனத்திருவிழாவும் 8 ஆம் திருவிழாவின் அன்று சப்பரத்திருவிழாவும் வெகு விமர்சையாக செய்யப்பட்டு வருகின்றது.

விநாயகப் பெருமான் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகர் இல்லாக்குறையையும் நிவர்த்தி செய்து வருடந்தோறும் வைகாசி மாதத்தில் இலட்சார்ச்சனையையும் செய்து வருகின்றனர். முறையே உற்சவ மூர்த்தியாகிய மகாலட்சுமி, பைரவர் செய்யப்பட்டு விழாக்காலங்களில் வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதை எல்லோரும் காணக்கூடியதாக இருக்கிறது.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை பரிபாலனத்தை எடுத்த நாள் தொட்டு ஆலய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றி வருகிறார் கள். இக்காலத்தில் 1993 ஆம் ஆண்டு முதல் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சமய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு சைவப்பெரியார்களின் உதவியினோடு சமயச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து 3 வருடகாலமாகச் செய்வித்துவந்தது குறிப்பிடத் தக்க அம்சமாகும். நம்பிக்கை பொறுப்பாளர் சபை மேற்படி ஆலயத்தைச் செவ்வனே பரிபாலித்து வரும் காலத்தில் விநாயகப் பெருமானுக்கும் மற்றும் பரிவாரங்களுக்கும் முறைப்படி வேதங்கள் ஓதப்பட வேண்டுமென எண்ணிப் பிராமண குலத்தவரைக்கொண்டு பூசைகள் செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானித்து அதன் பிரகாரம் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் பிராமண அந்தணர்களால் ஒழுங்கான முறையில் பூசைகள் செய்விக்கப்பட்டு வருகின்றன.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி யாழ் தீவக கற்பம் முழுவதும் மக்கள் குழப்ப நிலைகாரணமாக மக்கள் இடம் பெயர்ந்ததைத் தொடர்ந்து , அன்று தொடக்கம் ஆலயங்கள் பூட்டப்பட்டு 1996 ஆம் ஆண்டு சித்திரை மாதம் வரையும் பூட்டப்பட்ட நிலையில், மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியதை அடுத்து விநாயகப் பெருமானின் பூசைகள் மீண்டும் இனிதே ஆரம்பமாகியது.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக இடைநடுவில் நிறுத்தப்பட்ட திருப்பணி வேலைகள் மீண்டும் 1997 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. இத்திருப்பணியின்போது ஆலய இராஜகோபுரம், கோபுர வாசலில் புதிதாக அழகிய சிற்ப வேலைகளுடன் கூடிய மணிமண்டபம், வசந்த மண்டபம், பஞ்சமுக விநாயகருக்கான ஆலயம், தெட்சணாமூர்த்திப் பெருமான், சண் டேஸ்வரர் ஆகிய கடவுளருக்கும் புதிதாக இருப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலய உள் வீதியில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி கொங் கிறீற் பிளட் போட்டு மண்டபம் அழகுறச் சிற்ப வேலைகளுடன் அழகாகக் கட்டிமுடிக்கப்பட்டு 13.12.1998 இல் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து விநாயகப் பெருமானின் ஆலயத்தை மேன் மேலும் அழகுறச் அமைப்பதற்கு எண்ணிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினரும், அடியார்களும் மிகுதியாக இருந்த உள்வீதி மண்டப வேலைகளையும் அழகுறச் செய்து முடித்து விநாயகப் பெருமானின் ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் மிளிரச்செய்து 03.07.2005 ஆம் தினம் ஞாயிற்றுக்கிழமை வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11.07.2005 திங்கட்கிழமை தேர் உற்சவம் நடைபெறவுள்ளது.12.07.2005 செவ்வாய்க் கிழமை தீர்த்த உற்சவம் நடைபெறும்.

குறிப்பு:- இவ் ஆண்டு 25.03.2005 வெள்ளிக் கிழமை விநாயகப் பெருமான் அநுக்கிரகத்தால் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத் திருமண மண்டபத்திற்கு அத்திபாரம் இடப்பட்டுள்ளது. இம்மண்டப வேலைகளும் வெகுவிரைவில் நிறைவெய்திட அடியார்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் விநாயகப் பெருமானின் அருளையும் வேண்டி நிற்கிறோம்.

எல்லாம் அவன் செயல்

**தலைவர் த.இ. பாலசுந்தரம் (J.P.).**
**பொருளாளர் இ.குலசிங்கம்.**
**செயலாலர் சு.சுந்தரலிங்கம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**


விழாச் சிறப்புற வாழ்த்துவோர் :

பிள்ளையார் எலக்ரிக்கல்
பலாலி வீதி,
கோண்டாவில்.

தபேஷன் விவசாய மாளிகை
பலாலி வீதி,
கோண்டாவில்.

V.M.K Brothers
வீ.எம்.கே பிறதர்ஸ்
கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.
T.P:0776 759049, 0777 610044.


சுதா களஞ்சியம்
பலசரக்கு, கிருமிநாசினி விற்பனையாளர்
பலாலி வீதி, கோண்டாவில்.
T.P.: 222 7054

சோதி ஸ்ரோர்ஸ்
கோண்டாவில் கிழக்கு.

அரசடிப் பிள்ளையார்
பல்பொருள் வாணிபம்
பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

சிவா பிறதர்ஸ்
SIVA BROTHERS
GENERAL MERCHANT & TELEPHONE SERVICES
Palaly Road,
Kondavil.

BAMINI ENGINEERS & CONTRACTORS
Kondavil East,
Kondavil.




ஏழாலை,ஜூலை11

மயிலணி முருகமூர்த்தி ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.(எ-45-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூலை11

வட்டுக்கோட்டை வரகுபத்தனையில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு பேச்சியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு விசேட பொங்கல் பெருவிழாவும் 29ஆம் திகதி அன்னதானமும் நடைபெறும். (எ-203)

✦ ✦ ✦

தென்மராட்சி,ஜூலை11

மந்துவில் தெருவாரம் விஸ்வாம்தோட்ட விநாயகர் ஆலய மகாகும்பாபிசேகம் நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிசேகத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவர்.(எ-117-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூலை11

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு ஆயிலடி விநாயகர் ஆலய சம்புரோட்சண மகாகும்பாபிசேகம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.(எ-78-203)

✦ ✦ ✦

வலி.தெற்கு,ஜூலை11

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா நாளை திங்கட்கிழமை 11.07.2005 காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்கள் தொடர்ந்து இடம்பெறும்.

19ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 20ஆம் திகதி புதன்கிழமை பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.(எ-152)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூலை11

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அருள்மிகு முதது்மாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-203)

✦ ✦ ✦

தொல்புரம்,ஜூலை11

தொல்புரம் கொட்டியம்பதி அருள்மிகு ஆதி முத்துமாரி அம்மன் ஆலய பூரத் திருவிழா இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

பூரநட்சத்திர அபிசேக ஆராதனைகளைத் தொடர்ந்து அம்பாள் திருவீதியுலா வருவார். (எ-119-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூலை11

மண்டைதீவு சிறுப்புலம் அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்ட பிரதிஷ்டா மகாகும்பாபிசேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து 12 நாள்களுக்கு மண்டலாபிசேகம் நடைபெறும்.(3-88-203)

✦ ✦ ✦

தென்மராட்சி, ஜூலை11

தென்மராட்சி தெற்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மறவன்புலோ மத்தி நித்தர்புலம் செல்வமுத்துமாரி அம்பாள் ஆலய ஆனிப்பூர பொங்கல் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று 1008 சங்காபிசேகம், அன்னதானம் என்பன நடைபெறும். திருவிழாவுக்கு வருவோர் கமரா, கையடக்கத் தொலைபேசி போன்றன கொண்டுவருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (3-31-117-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூலை11

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.(203)

✦ ✦ ✦

பரந்தன்,ஜூலை11

முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிசேகம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. கும்பாபிசேகத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவர். (352-203)

# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, யாழ்ப்பாணம்

## 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் - 2005

## பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்

| பிரிவுகள் | போட்டிகள் | போட்டிகள் நடைபெறும் திகதி | போட்டிக்கான தலைப்புகள் |
|---|---|---|---|
| அதிமேற்பிரிவு தரம் 12 தரம் 13 | கட்டுரைப் போட்டி 1½ மணி | - 2005/07/23 காலை 10 மணி | "மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு கூட்டுறவு அமைப்பே சிறந்ததாகும்" "உலகமயமாக்கலும் கூட்டுறவும்" |
| | பேச்சுப் போட்டி 5-7 நிமிடம் மணி | - 2005/07/23 காலை 11 மணி | |
| | சித்திரப் போட்டி 2 மணி | - 2005/07/24 காலை 11 மணி | |
| மேற்பிரிவு தரம் 10 தரம் 11 | கட்டுரைப் போட்டி 1 மணி | - 2005/07/23 காலை 10 மணி | "சமூக பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதில் கூட்டுறவின் பங்கு" "கிராமிய அபிவிருத்தியில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்களிப்பு" |
| | பேச்சுப் போட்டி 5-6 நிமிடம் மணி | - 2005/07/23 காலை 11 மணி | |
| | சித்திரப் போட்டி 2 மணி | - 2005/07/24 காலை 10 மணி | |
| மத்திய பிரிவு தரம் 8 தரம் 9 | கட்டுரைப் போட்டி 45 நிமிடம் | - 2005/07/23 காலை 10 மணி | "சமத்துவ வாழ்வுக்கு கூட்டுறவு" "கூட்டுறவே சிறந்த சமூகத்திற்கான அடித்தளம்" |
| | பேச்சுப் போட்டி 4-5 நிமிடம் | - 2005/07/24 காலை 11 மணி | |
| கீழ்ப் பிரிவு தரம் 6 தரம் 7 | கட்டுரைப் போட்டி 45 நிமிடம் | - 2005/07/23 காலை 10 மணி | "கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம்" "எமது வாழ்வில் கூட்டுறவு" |
| | பேச்சுப் போட்டி 4-5 நிமிடம் | - 2005/07/24 காலை 11 மணி | |
| தரம் 11, 12, 13 | வினாடி வினாப் போட்டி 4 பேர் கொண்ட குழு | 2005/07/24 பகல் 12.30 மணி | கூட்டுறவு, பொது அறிவு, விஞ்ஞானம், விளையாட்டு, அரசியல், சரித்திரம் என்பன தொடர்பான பொதுவான வினாக்கள் அமையும். |

*பொதுவான போட்டி நிபந்தனைகள்:-*

1) வினாடி வினா தவிர்ந்த ஏனைய போட்டிகள் ஒவ்வொன்றிலும் ஒரு பாடசாலையில் இருந்து தலா 5 பேர் பங்குபற்றமுடியும்.
2) வினாடி வினா போட்டியில் ஒரு பாடசாலையில் இருந்து (4) நான்கு பேர் கொண்ட ஒரு குழு மாத்திரமே பங்குபற்றமுடியும்.
3) போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம், இல.12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் மேலே காட்டப்பட்ட அட்டவணைப்படி நடைபெறும். போட்டியாளர்கள் குறித்த நேரத்திற்கு சமுகமளித்து போட்டிகளில் பங்குபற்ற வேண்டும்.
4) விண்ணப்பங்களைச் சுயமாகத் தயாரித்து பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அனுப்பிவைக்கவேண்டும்.
5) போட்டிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி : 16.07.2005
6) விண்ணப்பங்கள் யாவும் 'செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபக் கட்டடத் தொகுதி 2ஆம் மாடி, இல.12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் மேற்படி முகவரியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(C/43999)(22)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஜப்பானிய நிறுவனம் உதவி

சாவகச்சேரி,ஜூலை11

கடந்த இரண்டாயிரமாம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் அழிவுற்றுள்ள சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான சிகிச்சை விடுதியொன்றை புதிதாக நிர்மானிக்க ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பு முன்வந்துள்ளது.

இத் திட்டத்திற்கான ஆரம்பக்கட்டக் கலந்துரையாடலொன்று கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது. யாழ்.அரச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் ஜப்பான் அமைப்பின் பிரதிநிதி கொயாமாவும் அவரது உதவியாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். அபிவிருத்தியடைந்து வரும் சமூக நலத்திட்டதிற்கு ஏற்ப இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஒரு மாடிக் கட்டடமாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ள இக்கட்டடத் தொகுதியில் தங்கி நின்று சிகிச்சை பெறும் சிறுவர்களுக்காக பொது நூலக வசதி, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, சிறுவர் பூங்கா என்பன அமையவுள்ளன. அத்துடன், சிறுவர்களுடன் தங்கி நிற்கும் பெற்றோர்களுக்கான அறைகளும் அமையவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் - மாவட்ட வைத்தியசாலை டாக்டர்கள் ச.அம்பிகைபாகன், திருமதி சி.இராஜஇராஜேஸ்வரி, வைத்தியசாலை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த ப.நடராசா மற்றும் ஏனைய உறுப்பினர்கள், தாதியர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-31)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 694 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 08-7-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5535961-5551761 |

லக்கினம் மீனம்

வெற்றி இலக்கங்கள்

02 19 31 49

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 17,79,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 349,125 | 10/- | 34,91,250/- |
| 2.இலக்கங்கள் | 32,073 | 20/- | 6,41,460/- |
| 1.இல லக்கினம் | 31,757 | 30/- | 9,52,710/- |
| 2.இல லக்கினம் | 2,889 | 100/- | 2,88,900/- |
| 3.இலக்கங்கள் | 843 | 500/- | 4,21,500/- |
| 3.இல லக்கினம் | 85 | 5,000/- | 4,25,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 67,20,820/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 77,73,070/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 77,73,070/-
தொடர் இல. 4593171 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5540956-1-18 |
| ஹம்பாந்தோட்டை | 5537036-3-44 |
| குருநாகல் | 5541055-8-78 |
| கம்பஹா | 5550819-6-40 |
| கண்டி | 5539474-6-89 |

## 09.07.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300399769 இலிருந்து 300417480 வரை

சீட்டிழுப்பு இல. 1622

13 15 62 68 சுப்பர் எண் 10

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.62,25,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 62,25,750/- | |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 12,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 40 | 5,000/- | 2,00,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 489 | 1,000/- | 4,89,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,562 | 500/- | 7,81,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,752 | 40/- | 9,10,080/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,456 | 20/- | 4,29,120/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,24,640 | 10/- | 32,46,400/- |
| | | மொத்தம் | 80,35,600/- |
| தங்க நகைகள், [illegible] | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 85,35,600/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 70,92,650/-

| | |
|---|---|
| [illegible] | 300409470-7-50 |
| [illegible] | 300401032-4-55 |
| [illegible] | 300412376-2-34 |
| [illegible] | 300414066-1-42 |
| [illegible] | 300406741-8-91 |

# அஸ்ரா வெற்றிக்கிண்ண கிரிக்கெட்

## யாழ்.இந்து - மகாஜனாவை வென்றது

யாழ்ப்பாணம்,ஜூலை11

அஸ்ரா கிண்ணத்துக்காக யாழ்.இந்துக் கல்லூரிக்கும் மகாஜனாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 17வயதுப் பிரிவு அணிக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கடந்தவாரம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணி சகல விக்கெட்டினையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

அருள்செல்வன் 44 ஓட்டங்களையும் சயிந்தன் 34 ஓட்டங்களையும் ஜெசிந்தன் 24ஓட்டங்களையும் பெற்றனர்.

சித்து 4 விக்கெட்டினையும், தர்சன் 2 விக்கெட்டினையும் மயூரப்பிரியன் , துமேஸ்சன், கௌசிகன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 4 விக்கெட்டை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது.

கிசோக் 130 ஓட்டங்களையும், நவயூகன் 76 ஓட்டங்களையும், அஜித் 32 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சிவசுரேந்திரன் 2 விக்கெட்டினையும் பவநேசன், கோகுலதாஸ் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

மகாஜனாக் கல்லூரி இரண்டாவது இனிங்சில் சகல விக்கெட்டினையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெசிந்தன் 22ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றார். மயூரப்பிரியன் 3 விக்கெட்டினையும் துமேஸ்சன்,அஜித், கௌசிகன், தலா இரண்டு விக்கெட்டினையும் வீழ்த்தினர். (3-190)

## அமெரிக்க மிஷன் 360 ஓட்டங்களை விளாசியது

யாழ்ப்பாணம்,ஜூலை11

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையில் நடந்த 15 வயதுப்பிரிவு ஆட்டத்தில் அமெரிக்கன் மிஷன் 360 ஓட்டங்களை விளாசித்தள்ளியது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 149 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த கரன், தனுசன் ஆகியோர் முறையே 46,22, 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

சேந்தன் 3 விக்கெட்டுகளையும், கோகுலதீபன் 2 விக்கெட்டுக்களையும் மதிதரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டக்களையும் இழந்து 360 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் மதிதரன் 69ஓட்டங்களையும் கோகுலதீபன் 62 ஓட்டங்களையும் சமராஜன் 54ஓட்டங்களையும் சேந்தன் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

சஞ்சீவன் 3 விக்கெட்டுக்களையும் கோவர்த்தனன், ஜசிந்தன், சயந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (3-86)

## தெல்லிப்பழை யூனியன் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை11

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கும் இடையில் நடந்த 15 வயதுப்பிரிவு ஆட்டத்தில் யூனியன் கல்லூரி வெற்றிபெற்றது.

யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 9 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் பெற்ற நிலையில் முதல் இனிங்ஸ்ஸுக்கான ஆட்டத்தை நிறுத்திக்கொண்டனர். இதில் மதிதரன், கோகுலதீபன், நிகிந்தன் ஆகியோர் முறையே 44, 32, 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

அருள்ராஜ், காந்தசீலன், தினேஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணிஅனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

ரஞ்சிதன் 38 ஓட்டங்களையும் யுவராஜ், சுதர்சன் ஆகியோர் தலா 32 ஓட்டங்களையும் பெற்றார்.

சேந்தன் 5 விக்கெட்டுக்களையும் நிகிந்தன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் அமெரிக்கன் மிஷன் கல்லூரி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேரம் முடிவடைந்தது.

கோகுலதீபன் 20 ஓட்டங்களையும் சமராஜன் ,சஞ்சீவன் ஆகியோர் தலா 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜெயபரன் 3 விக்கெட்டுக்களையும் அருள்ராஜ் ஒரு விக்கெட்டுக்டையும் கைப்பற்றினர். (3-86)

## சமநிலையில் முடிந்த ஆட்டம்

யாழ்.மத்திய கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயா இடையிலான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த 17 வயதிற்குட்பட்ட பிரிவு ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டினையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

நவநீத், வினோத்குமார் ஆகியோர் முறையே 42, 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

நிரோஜன் , நிஷாகரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டினையும் ராஜ்குமார் , றஜீவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா 9 விக்கெட்டினை இழந்து 156 ஓட்டங்களினைப் பெற்றது.

ஜெலன்ஸ் 28 ஓட்டங்களையும், லதீஸ், 23 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

தயான் 4 விக்கெட்டினையும், வியாசன், யோன்சன், ஆகியோர் தலா 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர். (3-190)

## மானிப்பாய் இந்து வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை11

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் நடந்த 17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் மானிப்பாய் இந்து வெற்றிபெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 150 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

தினேஷ், வினோத், ஜீவானந்தன் ஆகியோர் 28, 25, 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

ராஜ்குமார் 6 விக்கெட்டுக்களையும், ரஜீவன் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 135 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களை இழந்ததுடன் 10 ஆவது விக்கெட் நேரம் முடிந்ததால் ஆட்டமிழக்கப்பட்டது.

ஜெலன், நிஷாகரன், சஜந்தன் ஆகியோர் முறையே 32, 27, 25 ஓட்டங்களைப் பெற்றனர். வினோத் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த மானிப்பாய் இந்துக் கல்லூரி 5 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

வினோத் அதிரடி ஆட்டத்தின் மூலம் 72 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3-86)

# கண்டியை 2 விக்கெட்டுக்களால் வென்றது யாழ் சென்.ஜோன்ஸ்



யாழ்ப்பாணம்,ஜூலை11

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் கண்டி திருத்துவக் கல்லூரி அணிக்கும் இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான 40 ஓவர்களைக் கொண்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி திருத்துவக் கல்லூரி அணி 33.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது.

முனசிங்க 18 ஓட்டங்களையும் ரட்ணநாயக்க, தும்பாறக்கங்கா ஆகியோர் தலா 14 ஓட்டங்களையும் மிரண்டோ, ஜயசிங்க ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

மதன்ராஜ், நிருபன் தலா 2 விக்கெட்டினையும் நவகீதன் 3 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 39 ஓவர்களில் 8 விக்கெட்டினை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.

தும்பாறக் கங்கா 2 விக்கெட்டினையும் முனசிங்க 4 விக்கெட்டினையும் வீழ்த்தினர். (3-190)

## முன்பள்ளியின் விளையாட்டுவிழா

மானிப்பாய் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்ற சண்டிலிப்பாய் வடக்கு சிவசக்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சங்கத்தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், கூட்டுறவுப் பரிசோதகர் வி.கே.அருந்தவநாதன், வலிகாமம் பனை - தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி பொது முகாமையாளர் க.சுதாகரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-13)

விளையாட்டு

## புலோலி அறிவகம் பொன்விழா அகில இலங்கை ரீதியாகப் போட்டிகள்

வடமராட்சி,ஜூலை11

புலோலி வடமேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் பொன்விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கரபந்தாட்டப் போட்டி, கபடிப் போட்டி, பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டி, ஆண்களுக்கான 10 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி பெண்களுக்கான 10 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டி, கயிறுஇழுத்தல் போட்டி ஆகியன நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மற்றும் தனிநபர்கள் 'அறிவகம் சனசமூக நிலையம், புலோலி வட மேற்கு, புலோலி' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் பொன்விழா நடைபெறவுள்ளது. (3-173-203)





ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கு பிரதம விருந்தினர் கீ.பாலசிங்கம் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும், சிறப்பு விருந்திராகக் கலந்து கொண்ட பேரம் பலம் அன் சன்ஸ் நிறுவன உரிமையாளர் ஈ.நாகரத்தினம் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- நேசன்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.தில்லைநடராசா, மயிலணி, சுன்னாகம். (37581)

### விற்பனைக்கு

மொடினா - 1950, நண்ஸ்- 1950 பியூட்டி ஹோமர்- 2250, ரேஸிங் ஹோமர்- 1950 போன்றன விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ரட்ணம், இல.01,மகாத்மா வீதி,நெல்லியடி. T.P.: 021 226 - 3104 , 0777 - 779975 (குறிப்பு இச்சலுகை 11.07.2005 முதல் 13.07.2005 வரை மட்டுமே) (37587)

**Ronio Mechine, Dotmatrics Printer (Espon LQ 300+ )** விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 077 9004446 (37594)

**Love Birds** -275/- ஜக் கோப்பியன் 1950/- பௌட்டர் 1750/- பான்றல் - 1500/- இஜிப்ஷன் - 1500/- பிளக் பேதர்- 1750/- பிளக்ரேல்- 3250 போன்றன விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ரட்ணம் இல.01, மகாத்மா வீதி, நெல்லியடி 021 226-3104, 0777 779975. (குறிப்பு இச்சலுகை 11.07.2005 முதல் 13.07.2005 வரை மட்டுமே). (37458)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் சோம சுந்தரம் அவனியூவில் 13/4 பரப்புக் காணியில் கிணற்றுடன் கூடிய வீடு விற்ப னைக்குண்டு. தொடர்பு: **T.P.:** 0112 553516. (37560)

### கார் விற்பனைக்கு

3 ஸ்ரீ xx, 5 ஸ்ரீ xx (மைனர்) A 35 (ஒஸ்ரின்) தொடர் இலக்கமுடைய கார்கள் விற்பனைக்குண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 40/7, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (37525)

### கடை விற்பனைக்கு

வீதிச் சான்றிதழ் பெற்ற கடை. தொடர்பு: இல. 325, தியாகு, கலைக்கூடம் பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். **T.P.: 222 6469.** (37535)

### வீடற்றவன் - பொருளோபொருள்

**O/L** மாணவர்களே! வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் பொருளோ பொருள் நாடகத்தின் விளக்கமும் விமர்சனமும். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை உங்களுக்காகவே எழுதிய நூல்கள் ரூபா 25/. (37486)

### தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த மகாலிங்கம் மேனகா என்பவரது தேசிய அடையாள அட்டை (795452265V) யாழ்ப் பாண பஸ்நிலையத்திற்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து தவவும். (37559)

### வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சுண்டிக் குளிப் பகுதியில் விசாலமான சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு: 222 5780 . (சி-43986)

## பாலாவி கிராமத்தில் 15வீடுகள் நிறுவப்படும்

வரணி,ஜூலை11

வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு வீடமைப் புத்திட்டத்தின் கீழ் கொடிகாமம் பாலாவி கிராமத்தில் 15 குடும் பங்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக் கப்பட்ட பிரதேசங் களில் உலகவங்கி யின் நிதி உதவியின் கீழ் அமைக்கப்படும் வீட்டுத்திட்டத்தின் கீழ் பாலாவி கிராம மும் தெரிவு செய்யப் பட்டுள்ளது. இத்திட் டத்தின் கீழ் மிகவும் வறுமைக் கோட்டில் உள்ள அடிப்படை வசதிகள் அற்ற குடும் பங்களுக்கே வீட டைப்பு உதவி வழங் கப்படுவதாகத் தெரி விக்கப்பட்டது. (எ-170)

---

## மஹா கும்பாபிசேக விஞ்ஞாபனம்

மானிப்பாய் மேற்கு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், கட்டுடை

எண்ணெய்க்காப்பு

12.07.2005 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை.

குடமுழுக்கு

13.07.2005 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகி காலை 6.00 மணிக்கு ஸ்தூபி அபிசேகம் நடைபெற்று 6.40 மணிக்குள் மூலமூர்த்தி மகா கும்பாபிசேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

பிரதிஷ்டா பிரதம குரு கிராயாசேவாமணி பிரம்மஸ்ரீ

**கந்தா ஜெயராம சிவாச்சாரியார்**

(வளலாய் பிள்ளையார் தேவஸ்தானம். அச்சுவேலி)

தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ இ.புஸ்பராஜ சர்மா (கட்டுடை)

**திருப்பணிச்சபை.**

(37487) (14.21.45)

விளம்பர அனுசரணை:

**ரஞ்சன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,**

**பிரதான வீதி, மானிப்பாய்.**

---

**கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் [வ.து] கொடிகாமம்**

## பகிரங்க ஏல விற்பனை

மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான 27ஸ்ரீ 6195 இலக்கப் பாரவூர்தி பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படவுள்ளது.

**நாள்: 18.07.2005 திங்கட்கிழமை**

**நேரம்: முற்பகல் 11.00 மணி**

**இடம்: கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
(பழைய காரியாலயம்)
**கண்டி வீதி, கொடிகாமம்.**

*கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து), கொடிகாமம்.*

**தலைவர்.**

(37550) (14.21.45.)

---

## முதலாமாண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 02 - 1926 | 22 - 06 - 2004 |

அமரர் **ஞானமூர்த்தி ஐயாத்தம்பி**

**பாசத்தைப் பொழிந்து எம்மை வளர்த்து பாரினில் நாமுயர்ந்து நிற்க வழிகாட்டினீரையா! பண்புடனும் அன்புடனும் வாழ்ந்த உங்களை என்றும் மறவாது நினைந்து போற்றுவோம்!**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(37552) (14.21.45)

---

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

# மீள் கேள்வி அறிவித்தல்

01.06.2005ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிக்கப்படும் வேலைக்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்படிவம் வழங்கல் – 11.07.2005 – 25.07.2005 பிற்பகல் 3.30 மணி.**
**கேள்விப்படிவம் ஏற்றல் – 29.07.2005 நண்பகல் 12.00 மணி வரை.**
**கேள்விகள் திறத்தல் – 29.07.2005 பிற்பகல் 2.30 மணி.**

| வேலை விவரம் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | கேள்விப் படிவக் கட்டணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| **செல்வச்சந்நிதி கோயில் அருகில் பொதுமலசலகூடம் அமைத்தல்** | M9 | 3300.00 | 575 |

மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

*நகராட்சி மன்ற அலுவலகம், வல்வெட்டித்துறை.*
*2005.07.08*

(சி.43992) (14)

**நா.தம்பிராசா,**
**செயலாளர்,**
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

---

## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் **நரசிம்ம நாயுடு**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்: (37324)

**பிள்ளையார் இன்** அறை எண் 9, (14-17-21)
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.

---

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**11-07-2005 - 18-07-2005**

- முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

▸ சக்தி குறைவு ▸ ஞாபக மறதி ▸ பயம் ▸ நடுக்கம்
▸ நித்திரைக் குறைவு ▸ ஆண்மைக் குறைவு ▸ நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.


**குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்**

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
**பிரபல மனோதத்துவ நிபுணர்**
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-41917) (26-11-14)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 11 - 1918 | 04 - 07 - 2003 |

அமரர்

**கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை**

(கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ், நாச்சிமார் கோயிலடி)

**திதி: பஞ்சமி**

வாழ்விலும் எம்மை அன்புடன் நேசித்தீர்!
இரண்டாம் ஆண்டு நினைவுநாளில்
அன்புடன் உம்மை நினைவுகூருகின்றோம்

**குடும்பத்தினர்.**

601/2, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(37582) (14.21.46)

---

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை ஜோசவ் செல்வராஜா (சின்னத்துரை)

பண்டத்தரிப்பு, கீரிமலை வீதியைச் சேர்ந்த ஜோசவ் செல்வராஜா (சின்னத்துரை) அவர்கள் 08.07.2005 வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை மற்றும் மேரிப் பிள்ளையின் (Holand) அன்பு மகனும் சீமாம்பிள்ளை, காலஞ் சென்ற ஆனாப்பிள்ளையின் அன்பு மருமகனும் மரிய கொறற்றியின் அன்புக் கணவரும் மதனி, ரஜனி, ராஜினி, ரமேஸ், ஜோண் ஆகியோரின் அன்புத் தந்தையும் பொஸ்கோ செல்வம் அவர்களின் அன்பு மாமனாரும் ஜெயசீலன்(Holand) , மனோகரன்(Swiss) , ஆரோக்கியநாதர் (Denmark) , தங்கராசா (Leenus Cream couse - பண்டத்தரிப்பு), விநோதராஜ் (Sweedan) , மேரிரெஜினா (Italy) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மேனகா, டினோஜா, தனுஜன், ஷெரோம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2005) திங்கட்கிழமை மாலை 4 மணிக்குப் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சில்லாலை தெற்கு. பண்டத்தரிப்பு.*

(37579) (14.21.45)

தகவல்
**ம.தங்கராசா**
(சகோதரன்)

## பண்டத்தரிப்பில் அடிக்கடி மின்தடை

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சில்லாலை, பிரான்பற்று ஆகிய பகுதிகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டு வருகின்றது. திடீரென அடிக்கடி மின்சார விநியோகம் தடைப்படுவதால் மின்பாவனையாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் எனக்கூறப்பட்டது. இத்தகைய நிலைமையால் மாணவர்கள் வீட்டில் படிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-135)

## சீரற்ற நிலையில் மருதங்கேணி மைதானம்

மருதங்கேணி பொதுவிளையாட்டு மைதானம் சீரற்றுக் காணப்படுகின்றது. மேற்படி மைதானம் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சமீபமாக இந்த மைதானம் அமைந்துள்ளது. ஆயினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இந்த மைதானம் குறித்து அக்கறை செலுத்துவதில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-70)


## கணபதி ஜோதிட நிலையம்

பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒருமுறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37588)


## தேவை

**53 வயதுடைய பெண் ஒருவருக்கு சிறுநீரகம் (Kidney) ஒன்று தேவை. சிறுநீகரம் $B^+$ குறூப்பைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். 20 தொடக்கம் 60 வயதுக்குட்பட்ட பெண அல்லது ஆண் யாராக இருந்தாலும் வழங்கலாம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.** (37607)(29-11-34)

தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே.இல. **4591443**

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 – 06 – 1922 | 28 – 05 – 2005 |

அமரர் **மயிலு வல்லிபுரம்**

அன்புடனே எமை அரவணைத்து
பண்புடனே அறிவூட்டி
அவனியில் வாழவைத்து
ஆண்டவன் சந்நிதியை அடைந்த ஐயாவே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

55, சிவன் புதுவீதி,
நல்லூர். (37610)(29-11-34)

பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



**சிவஞானசுந்தரம் கஜீபன்**

இறுதியாண்டு மாணவன்
(Faculty of livestock Fisheries and Nutrition, Wayamba University)


நல்லதோர் மனதிற்கு மரணமில்லை - மனமொன்றிய
நினைவிற்கு மரணமில்லை - நினைவொன்றிய
உணர்விற்கு மரணமில்லை - உணர்வொன்றிய
நட்பிற்கு மரணமில்லை நண்பனே!

எமது நண்பனின் பிரிவினால் கலங்கித் தவிக்கும் குடும்பத்தவர் துயரில் நாமும் இணைந்து கண்ணீர்த்துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

நண்பர்கள்
(Faculty of livestock Fisheries and Nutrition, Wayamba University).

(37602)(29-11-34)

## மரண அறிவித்தல்



### கந்தையா ஜெயக்குமார்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான பரமேஸ்வராச் சந்தி, சிவன் ஸ்ரோஸில் கடமையாற்றியவருமான கந்தையா ஜெயக்குமார் நேற்று (10.07.2005) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் மலர்மதிகுமாரியின் அன்புக் கணவரும் சதுர்புயன், லலிதா, சதுர்சன், சதுர்சா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமலர், ஜெயந்தி, சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார், தேவி, இந்திரகுமார், மணிகிருஸ்ணகுமார், ஜோதிஸ்வரன், அருட்சோதி (சூட்டி), லதிஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருமைத்துரை - நாகேஸ்வரி தம்பதியினரின் பெறாமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2005) திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவாலய வீதி, உரும்பிராய் கிழக்கு.* தகவல்: **மனைவி** (சி-44204)(29-11-34)


## பிரத்தியேக வகுப்பு

**கணக்கீடு**

பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க காலை நேர வகுப்பு

**2007 A/L**

**தொங்கல் கணக்கு**

ஆரம்பம்:
12.07.2005 செவ்., வியா. -6.45 (புதிய நேரம்)

**பா.முகுந்தன** B.B.A. (Hons)

குறிப்பு: மாணவர்களின் வசதிக்கேற்ப நேரம் மாற்றப்படும். (37580)(29-11-34)

## Modern Education Centre

(நெல்லியடி, பருத்தித்துறை)

A/L பரீட்சை எடுத்தவர்களுக்கான பின்வரும் பிரிவுகள் ஆரம்பம்

- Spoken English with Grammar (முழுமையான இலக்கணப் பாடப்பரப்பும் பேச்சுப் பயிற்சியும் கொண்ட பிரிவு)
- Special English Speech Course (இலகுவான பேச்சுப் பயிற்சிகளுடன் கூடிய முழுமையான பேச்சு ஆங்கிலப் பிரிவு)

Lectured By:
Mr.K. Nishanthan (Dip.in Eng.)

ஆரம்பம்: 13.07.2005 புதன்

**நெல்லியடியில்:**
திங்கள், புதன், வெள்ளி- At 8 a.m.

**பருத்தித்துறையில்:**
திங்கள், புதன், வெள்ளி - At 2 p.m. (ப.நே)

குறிப்பு:
- கணனி மூலமான இலகுவான பேச்சு பயிற்சிகள் முழுமையாக வழங்கப்படும்.
- O/L, A/L பரீட்சைகளுக்கான வழிகாட்டல் பாடத்திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- முன்னர் கற்றவர்களுக்கான புதிய பிரிவும் ஆரம்பமாகியுள்ளது. (37603)(29-11-34)

*அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.*


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 – 12 – 1927 | 22 – 07 – 2004 |

அமரர்
**சின்னத்தம்பி தர்மலிங்கம்**

ஆண்டொன்று நீங்கினாலும் ஆழ்மனதை
விட்டு நீங்காது
ஆண்டாண்டு காலத்திற்கும் நிலைத்திருக்கும்
நினைவுகளை
அள்ளித் தந்திட்ட தந்தையே! உன்திரு
உடலால் எம்மை
விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு மறையாது.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய கொக்குவில் மஞ்சவனப்பதியானைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (37588)(29-11-34)


**நாதவீஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
**6'.2"** (ரீல்ஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
வெகுவிரைவில் அர்ஜுன், சினேகா நடித்த **சின்னா** (சி-43363)

**ராஜா** யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
**சந்திரமுகி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30; 2.30, 6.30, 9.30 (பு.நே.)
15.07.2005 முதல் **கற்க கசடற** (C/41381)(12-17)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
சுப்ப ஸ்ரார் விஜயசாந்தியின்
**சூர்யா** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே). (C/41380)(29-16)


## மரண அறிவித்தல்கள்

### வினாசித்தம்பி சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உபயகதிர்காமம் புலோலியை வதிவிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி சிவஞானசுந்தரம் (இளைப்பாறிய தபாலதிபர்) நேற்று (10.07.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வினாசித்தம்பி - சின்னம்மாவின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற சதாசிவம் தம்பதியினரின் மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் உமா (கனடா), கலா, யோககுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவீந்திரன் (கனடா), ஆழ்வாப்பிள்ளை (பொறியியலாளர்), விஜயராணி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கீரகுமரன், கீதாஞ்சன், உமாசங்கர், வேல்வேந்தன், சங்கீதா, தருண் ஆகியோரின் பாசமிகு பேரனும் குலநாயகம், சிவலோகநாதன், நவநீதராணி, சிவலோகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உபயகதிர்காமம்,*
*புலோலி.* (சி-44203)(29-11-34)

தகவல்:
**சி.புனிதவதி**
**(மனைவி).**

### சுப்பிரமணியம் கோபாலபிள்ளை



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது 57, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் கோபாலபிள்ளை(முன்னாள் பிரபல வர்த்தகர், காங்கேசன்துறை) நேற்று (10.07.2005) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி அடைக்கலம்மா கோபாலபிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, குமாரசாமி, பசுபதி, பொன்னம்பலம், தனுஷ்கோடி (கனடா), சிதம்பரம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவமலர் (லண்டன்), சோதிநாதன் (கனடா), தங்கமலர் (ஜேர்மனி), கிறிஸ்ரி ஆனந்தராசா (தபாலதிபர், கொட்டாஞ்சேனை), சண்முகதாசன் (தாஸ் - பிரான்ஸ்), மரியஸ்ரெலா (ஒல்லாந்து), தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் விஜயரத்தினம், ரோகினி, அந்தோனிப்பிள்ளை, சுந்தரமதி, கிருஷ்ணவேணி, செல்வராசா, பாமா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, 57 ஆம் இலக்க இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கோ.ஆனந்தராசா**
(தபாலதிபர், அஞ்சல் அலுவலகம், கொட்டாஞ்சேனை).

*இல. 57, சுவாமியார் வீதி,*
*கொழும்புத்துறை.* (37608)(29-11-34)

### குலசேகரம்பிள்ளை சிவனேஸ்வரி (கிச்சி)

(சிவனேஸ்வரி ஸ்ரோர்ஸ் - விசுவமடு)

காரைநகர், நாவலடிகேணியைப் பிறப்பிடமாகவும் விசுவமடு, 13ஆம் கட்டையில் வசித்தவருமான குலசேகரம்பிள்ளை சிவனேஸ்வரி 09.07.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பாலாவோடை செல்லத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் கிருபானந்தன் (சிவனேஸ்வரி ஸ்ரோர்ஸ், விசுவமடு), சிவானந்தன் (ஹொலன்ட்), அருளானந்தன் (சிவனேஸ்வரி ஸ்ரோாஸ், விசுவமடு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாதேவி, மனோரஞ்சிதம், தவமலர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அஜந்தன் பிரியா, கிருஷாந், கம்சிகா, வசீகரன் தனுஷா, பிரகாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இராமச்சந்திரன் (மலேசியா), பரமேஸ்வரி, மகேஸ்வரி, புவனேஸ்வரி, கோடிலிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2005) திங்கட்கிழமை பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவலடிகேணி,*
*காரைநகர்.* (37605)(29-11-34)

தகவல்:
**கு.கிருபானந்தன்**
(மகன்).

### திருமதி இராயப்பு மரியமுத்து (நேசம்)



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கைத்தொழிற்பேட்டை வீதி, அச்சுவேலியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராயப்பு மரியமுத்து 05.07.2005 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை இராயப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகி, நீக்கிலாப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் சகோதரியும் அன்ரனி மரியதாஸ், செபோ (தவராசா - பிரான்ஸ்), பாலேந்திரா றோஸ்மலர், அல்பேட் ஜெயராஜா (லண்டன்), காலஞ்சென்ற புனிதமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராணி,ஜெயந்தினி (பிரான்ஸ்), பாலேந்திரா றோஸ்மலர் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் அற்புதமலரின் சிறிய தாயாரும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை, இரத்தினம், பேரின்பநாயகம் மற்றும் எலிசம்மா, அமிர்தநாயகம், பிலோமினா ஆகியோரின் மைத்துனியும் அன்ரன் பிரான்சிஸ் (Apba யாழ்.) சைலஜா, பவான் (பிரான்ஸ்), சுஜாதா (பிரான்ஸ்), றஜீவ் (NIT, மாணவன்), உதயன் (பிரான்ஸ்), சிவானி (இந்தியா) டனீசியஸ், தர்சன், டன்ஸ்ரன் (பிரான்ஸ்), சாரா (பிரான்ஸ்), சபீன் (லண்டன்), எவ்லின் (லண்டன்), கெவின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜனு, செபோன், ஷெரோனி (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல்(13.07.2005) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் பூசைப் பலியின்பின் அச்சுவேலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைத்தொழில் பேட்டை வீதி,*
*அச்சுவேலி.* (37611)(29-11-34)

தகவல்:
**பிள்ளைகள்.**

# புலிகளின் பணிமனை மீதான தாக்குதலுக்கு தமிழ் மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம்!

யாழ்ப்பாணம், ஜூலை11

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் பணிமனை மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலை யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுத் திருமலை செல்வநாயகபுரம் வீதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பணிமனையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கடற்புலிப் போராளி டிக்கன் மற்றும் இளம்புலி ஆகியோரும் இரண்டு பொதுமக்களும் பலியாகியுள்ளனர் . சிறிலங்கா அரசின் காட்டு மிராண்டித்தனமான பாரிய யுத்தநிறுத்தமீறலான இந்தச் சம்பவத்தை மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்ட காலத்தில் இருந்து தமிழ்ப் போராளிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் சிறிலங்கா இராணுவத்தினரும் அவர்களின் ஆதரவுடன் இயங்கும் குழுக்களும் மேற்கொள்ளும் தாக்குதல்களால் அதிருப்தி அடைந் திருந்த தமிழ் மக்கள் இச்சம்பவத்தை கேள்வியுற்று கடும்கோபத்துக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன் சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுத்தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் இராணுவத்தினர் டிக்கனை விரைவில் சுட்டுக்கொலை செய்வோம் என்றுகூற அப்போராளி திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் அவர்களிடம் தெரிவிக்க எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார். இருந்தும் இந்த சம்பவத்தினை இராணுவம் நடத்திமுடித்திருக்கின்றது. எவ்வித ஆயுதமும் இன்றி மக்களுக்காக வாழ்ந்து மக்களுக்காகப் பணிபுரிந்து கொண்டிருப்பவர்களை முதுகில் அடித்துச் சீண்டுவது இராணுவம் நெற்றிஅடி வாங்குவதற்குப் பாரிய தூண்டுதலாகும். பல போராளிகளையும் பொதுமக்களையும் ஒப்பந்த காலத்தில் கொன்று குவித்த இராணுவம் தனது கொலைத் தாண்டவத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பதைத் தமிழ் மக்கள் தாங்கிக் கொண்டிருக்கமுடியாது.

போராளிகளுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்த தமிழ்மக்களால் காலக்கெடு விதித்திருந்த காலப்பகுதியிலும் இராணுவம் வெளிப்படையாக இத்தாக்குதலை நிகழ்த்தி தங்களின் மனநிலையை வெளிக்காட்டி தமிழ் மக்கள் பொறுத்திருப்பதில் பிரயோசனமில்லை என்பதனையும் உணர்த்தியுள்ளது.

இதனை வெட்டவெளிச்சமாக நிகழ்த்தி முடித்த இராணுவத்தினர் பொங்கியெழும் மக்கள் சக்தியின் விளைவினை மிகவிரைவில் அனுபவிப்பர் என எச்சரிக்கின்றோம்.

# சேது கால்வாய்த் திட்டத்தால் இலங்கைக்குப் பாதிப்பில்லை!

## இந்திய அமைச்சர் மீண்டும் வலியுறுத்து

புதுடில்லி,ஜூலை11

சேது சமுத்திரத் திட்டம் இலங்கைக்குப் பாதகமாகவோ அதன் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாகவோ இருக்காது என்று இந்திய மத்திய தரைவழி மற்றும் கப்பல்போக்குவரத்துத் துறை அமைச்சர் டி.ஆர். பாலு தெரிவித்தார்.

சேது சமுத்திரத் திட்டத்தால் இலங்கையில் சுற்றுப்புறச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கவலை தெரிவித்திருந்தார்.

''இந்தியாவுடன் இது தொடர்பாக நடத்தப்படும் பேச்சுகள் தோல்வியடைந்தால், இறுதி நடவடிக்கையாக சர்வதேச நீதிமன்றத்தை இலங்கை நாடும் வாய்ப்பு உண்டு'' - என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இது குறித்துச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்ததாவது:-

இலங்கை நிபுணர்கள் இரண்டுமுறை இந்தியா வந்தனர். அவர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. அவர்களது சந்தேகங்கள் அனைத்துக்கும் சரியான வகையில் பதிலளிக்கப்பட்டது. அதன் பின்னர் அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது என்றே கருதினோம்.

சேதுகால்வாய்த் திட்டம் இலங்கைக்குப் பாதகமாகவோ, அதன் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாகவோ இருக்கும் என்று நாம் கருதவில்லை. இந்திய எல்லைக்குள் சேது சமுத்திரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிபுணர்களின் கருத்துக்களை அறிந்த பிறகே இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதனால், இந்தியாவினதோ இலங்கையினதோ சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படாது.

இது தொடர்பாகச் சந்தேகங்கள் இருந்தால் இலங்கையிலிருந்து எத்தனை நிபுணர்கள் வந்தாலும் அவர்களுக்கு நாம் தகுந்த விளக்கங்களை வழங்குவோம்.

நட்பு நாட்டுக்குப் பாதகமாக இந்தத் திட்டத்தை இந்தியா மேற்கொள்ளாது. இதற்காக சர்வதேச நீதிமன்றத்தை நாடவேண்டிய தேவையும் ஏற்படாது.

இன்னும் சொல்லப்போனால், இலங்கையின் வடக்கேயுள்ள காங்கேசன்துறை போன்ற துறைமுகங்கள் இத்திட்டத்தால் அபிவிருத்தியடையும் - என்றார் டி.ஆர்.பாலு. (க)

## முஸ்லிம் தலைமைகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துகொள்ளமுடிந்தது.

''தமிழ் பேசும் முஸ்லிம்கள் நமது சகோதரர்கள், நமது தாயக மண்ணின் உடன்பிறப்புகள், அவர்களின் அரசியல் தலைவர்கள் எனத் தம்மைக் கூறிக்கொள்பவர்கள் தங்களது அரசியல் சுயலாபங்களுக்காக எதையும் பகிரங்கமாக - அரசியல் மேடைகளில் - முழங்கலாம். ஆனால், அதற்காக நாம் முஸ்லிம் மக்களுக்கு விரோதமாக நடந்துகொள்ளமுடியாது. அவர்களையும் அரவணைத்தே தீர்வுகளைத் காணவேண்டும். முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து அவர்களோடு பேசித் தீர்க்க நாம் தயார்'' - என்றார் தமிழ்ச்செல்வன்.

'நுஆ' முஸ்லிம்காங்கிரஸ் போன்ற முஸ்லிம்களின் பிற முக்கிய கட்சிகளுடனும் பேசவேண்டியிருந்தால், அவர்களுடனும் பேசத் தயாராக இருக்கிறோம். - என்றார் அவர்.

எமது போராளிகளின் பாதுகாப்பான பயணப் போக்குவரத்து விவகாரம் இப்போது நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு நாம் விரைந்து தீர்வுகாண வேண்டியிருக்கிறது. அதன் பின்னர் முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்துப் பேசி சுமுக நிலையை- இணக்கத்தை - ஏற்படுத்துவது குறித்து ஆராயலாம் - என்றும் அவர் சொன்னார்.

எது எப்படியென்றாலும் தமிழர்களை - அவர்களின் பிரதிநிதிகளான புலிகளை - எதிரிகள்போலக் கணிக்கும் விதத்தில் சில முஸ்லிம் தலைவர்கள் வெளியிட்டுவரும் கருத்துக்கள் புலிகளின் தலைமையை சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதை உணரமுடிந்தது.(க)

## திருகோணமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனத்தையும் பொதுமக்கள் சிலர் நேரில் கண்டுள்ளனர்.

திருகோணமலை நகரம் தீவிர பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதேசமயம் தாக்குதலுக்கு இலக்கான புலிகளின் அலுவலகம் அமைந்துள்ள வீதியின் வடக்கே சுமார் 250 மீற்றர் தூரத்தில் 3ஆம் கட்டை இராணுவ சோதனை நிலையமும் மேற்கே 250 மீற்றர் தொலைவில் உப்புவெளிப் பொலீஸ் நிலையமும் அமைந்துள்ளன.

இவற்றினூடாகவே தாக்குதல் நடத்திய வான் உள்ளே வந்து வெளியே சென்றது என்று சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் முருகன் கோயிலடியில் நின்றிருந்த இராணுவத்தினரைத் தாக்குதலின் பின்னர் அந்த இடத்தில் காணவில்லை எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தை நேரில் கண்ட இரு இளைஞர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் நேற்று சாட்சியமளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பட்டப்பகலில் போராளிகள் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்படுவதையடுத்துப் பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர். இராணுவத்தினரையும் பொலீஸாரையும் அங்கிருந்து வெளியேறும்படி கோரி கோ ம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக வந்திருந்த பொலீஸ் அலுவலர் ஒருவரின் கமராவையும் அவர்கள் ஆத்திரத்தில் சேதப்படுத்தினர் என்று கூறப்பட்டது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினரும் பொலீஸாரும் அப்பகுதிக்குச் செல்லும் வாகனங்களைத்தீவிரசோதனைக்கு உட்படுத்தினர்.

பிற்பகல் 1.15 மணியளவில் இறந்தவர்களின் சடலங்கள் சம்பவ இடத்திலிருந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட் டன.

திருகோணமலைப் பிரதேசம் இராணுவத்தினராலும் பொலீஸாராலும் நிரம்பி வழியும் நிலையில், இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. இந்த நிலையில், படையினர் யாருக்குப் பாதுகாப்பு வழங்குகிறார்கள் என்று சீற்றத்துடன் வினா எழுப்புகின்றனர் திருகோணமலைத் தமிழர்கள். (க)

## திராய்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனர். அத்துடன், துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர்.

இந்தத் தேடுதலின்போது எவரும் கைது செய்யப்படவில்லை. எனினும், கிராமத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களினதும் விவரங்களையும் விசேட அதிரடிப்படையினர் திரட்டிச் சென்றுள்ளனர். கிராமத்திலிருந்த இளைஞர்கள் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளில் தொடர்புபட்டிருந்தார்களா என்பதுபற்றி படையினர் ஒவ்வொருவரிடமும் விசாரணைகளை நடத்தினர். (க)

## திருமலையில் இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனந்தெரியாத நபர்களால் நயவஞ்சகமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டதில் போராளிகள் உட்பட நால்வர் கொல்லப்பட்டும் ஒருவர் காயமடைந்தும் உள்ளனர்.

சமாதான ஒப்பந்தத்துக்கமைய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிராயுதபாணிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது திட்டமிட்ட அடிப்படையில் - ஸ்ரீலங்கா படைகளின் பூரண அனுசரணையுடன் - தமிழ்த் தேசிய விரோதக் கும்பலினாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தத்துக்கு அழைக்கும் செயலாகும். இந்த நடவடிக்கை முற்றிலும் சமாதானத்துக்கு எதிரான சக்திகளாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் ஒரே பாதுகாப்பு அரணாக உள்ள புலிகள் மீதான இத்தகைய தாக்குதல்கள் சமாதானத்தை நிச்சயமாக இல்லாதொழிக்கும். எனவே, இந்த மோசமான சதிகார நடவடிக்கையைக் கண்டித்து இன்றுமுதல் போராளிகளின் வித்துடல்கள் விதைக்கப்படும்வரை பூரண கதவடைப்பின் மூலம் எம் ஒன்றுபட்ட எதிர்ப்பினையும் கண்டனத்தையும் தெரிவிப்போம்.

எமது தாயகத் தலைநகரில் இனிமேலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடராதிருக்க வேண்டுமெனில், ஒன்றுபட்ட மக்கள் எதிர்ப்பு நடவடிக்கை மூலமே இவற்றுக்கு நாம் முடிவு கட்ட முடியும். எமது நகரம் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இச்சம்பவத்துக்கு ஸ்ரீலங்கா அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

யுத்த சூழ்நிலையை விட சமாதான சூழ்நிலையே எமக்குப் பெரிய ஆபத்தைத் தந்து கொண்டிருக்கிறது.

எனவே, பாடசாலைகள், அரச நிறுவனங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், போக்குவரத்துகள், முச்சக்கர, துவிச்சக்கர வண்டிகள் யாவும் பூரணமாக நிறுத்தப்பட்டு அமைதிக்கு எவ்வித ஊறும் விளைவிக்காது, வன்முறைக்கும் இடம்தராது தொடர்ந்து எம் அகிம்சை வழியில் தெரிவிப்போம் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் வித்துடல்கள் திருகோணமலை அரசியல்துறை அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. இன்று அவை சம்பூருக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன. அங்கு ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படவுள்ளன. (க)


IBMS

மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

விண்ணப்பித்து விட்டீர்களா?

#410, K.K.S. Road, Jaffna

NMMV Rd, Nelliady · Sangaththanai, Chavakachcheri

விரிவுரைக் கட்டணம் முற்றிலும் இலவசம்

aat

Foundation, Intermediate &Final -Jan.2006

Chartered Accountancy

Foundation & Intermediate -Jan. 2006

No lecture fee for aat foundation & intermediate. New batches will be commenced on 30th July 2005. Admission will be accepted until 23rd of July 2005.

IPAS

199, பிரதான வீதி (பிறீமியர் பேக்கரி மேல்மாடி) யாழ்ப்பாணம்

அலுவலகநேரம் திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு 9.00-1.00 வரை

Tel:- 0777-563294, 0777-270452

E-mail :-ipasjaffna2002@yahoo.com



PC UPGRADES தரமுயர்த்தல்

உங்கள் பாவனையில் உள்ள கணனிகளை தற்கால தொழில் நுட்பத்திற்கேற்ப அதி நவீன கணனிகளாக மாற்றித்தரப்படும்



■ உங்கள் கணனிகளின் பரிசீலனை இலவசம்

■ உங்கள் வீட்டிற்கு / அலுவலகத்திற்கு எமது தொழில் நுட்பவியலாளர்கள் வந்து பரிசீலிக்கும் வசதி

MICRO PC SYSTEMS

யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893

நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536



SAAMSTECH

க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றியோருக்கான பிரிவு ஆரம்பம்

காலம்3மாதங்கள்

சலுகைகட்டணம் : ரூபா 3000/-

கற்பித்தல், உரையாடல், மற்றும் ஒலிப்பயிற்சி அடிப்படையிலான வகுப்பு மூலமாக முழுமையாகக் கதைக்கலாம்.

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

841,HOSPITAL Rd. JAFFNA



COLLEGE OF ENGLISH

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH/ GRAMMAR By: T.THANENDRAN

Speed Batch

புதிய பிரிவு

செவ்., வியா. 4.30 p.m.

O/L ENGLISH PAST PAPER CLASS

செவ்.,வியா. - 5.30 p.m.

*தனிப்பட்ட பரீட்சார்த்திகளிற்கும்



தென்னிந்தியாவில் இருந்து

ஏழாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக்கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி

அவர்கள்

வியாழமாற்றம், சனிமாற்றப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகைதந்துள்ளார்.

பார்க்கும் நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை.

கைரேகை மட்டும் 9 மணிமுதல் ஒரு மணிவரை

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

(37563)

ராஜகுருசாமி

மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்

60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பத்மநாதன் (கிச்சி மாஸ்ரர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பத்மநாதன் அவர்கள் நேற்று (10.07.2005) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். அத்துடன், 12.07.2005 செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த அவரின் மருமகனாகிய கந்தையா குகதாசன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
T.P.: 0714144855 (37613)(29-11-34)

தகவல்:
பவானி (மகள்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.